| ஒப்பந்த விலை | ரூ. | 12.75 |
| விலை வித்தியாசம் | ரூ. | 0.80 |
| கொள்முதல் செய்யவேண்டிய அளவு 3,31,671 லிட்டர்கள் X 0.80 | ரூ. | 2,65,336.80 |

காலநீட்டிப்பு செய்வதால் ஏற்படும் சேமிப்பு **ரூ.**2,65,336.80 – ஆகும்

ஆகவே, சோடியம் ஹைபோ குளோரைட் திரவம் வழங்கி வரும் ஒப்பந்த நிறுவனமான மெசர்ஸ் தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சென்னை நிறுவனத்திடம் கேட்டு கொண்டதில் அந்நிறுவனம் ஒப்பந்த விலை விகிதத்திலேயே காலநீட்டிப்பு காலம் வரை வழங்கிட சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளதை ஏற்கலாம்.மேலும் பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கிட வேண்டியதன் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி ஏற்படும் காலதாமதத்தையும், காலநீட்டிப்பு செய்வதால் ஏற்படும் சேமிப்பு ரூ.2,65,336.80–ஐ கருத்தில்கொண்டும், இரண்டாம் முறையாக காலநீட்டிப்பு பெற்று சோடியம் ஹைபோ குளோரைட் திரவத்தை தொடர்ந்து கொள்முதல் செய்திட ஏற்படும் செலவினம் ரூ 49,90,000.00 – க்கு நிர்வாக அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. இப்பணிக்கான செலவின தொகை ரூ. 49,90,000.00– க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. சோடியம் ஹைப்போ குளோரைடு திரவத்தினை ஏற்கனவே வழங்கி வரும் நிறுவனமான மெசர்ஸ். தமிழ்நாடு கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் மூலமே தொடர்ந்து 80 நாட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமாகிய லிட்டர் ஒன்றுக்கு ரூ.12.75/– வீதம் 3,31,671 லிட்டரை ரூ 49,90,000.00– க்கு வாங்கி கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணிக்கான செலவினத்தை 2022 – 2023ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் கணக்குத் தலைப்பு எண். 2305009 ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.1200.00இலட்சத்திலிருந்து செலவு செய்துக் கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(இ4/ 12254/ 2022 மையம்)**

**தீர்மானம் எண்.175 பொருள்:31 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 32**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை பணியில் வீட்டு வாசலில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் பணிக்கு புதிய மின்கல வாகனங்கள் (BOV) – 6 எண்கள் M/s.ICIC Bank,Trichy வங்கி சமூக பொறுப்பு திட்டத்தின் (CSR Fund) கீழ் உபயமாக 6 எண்கள் உரிய ஆவணங்களுடன் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு 22.10.2022ந் தேதி மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிருவாகத் துறை அவர்களின் முன்னிலையில் வழங்கப்பட்ட கீழ்கண்ட புதிய மின்கல வாகனங்களின் (BOV) விபரம் மாமன்ற பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| Sl.No | Vehicle Registration No | Chassis No |
|---|---|---|
| 1 | TN 45 CB 8389 | MB7C8CLLFNJJ49076 |
| 2 | TN 45 CB 8380 | MB7C8CLLFNJJ49093 |
| 3 | TN 45 CB 8375 | MB7CECLLFNJJ49077 |
| 4 | TN 45 CB 8343 | MB7C8CLLFNJJ49063 |
| 5 | TN 45 CB 8319 | MB7C8CLLFNJJ49074 |
| 6 | TN 45 CB 8371 | MB7C8CLLFNJJ49096 |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட வாகனங்களை மாநகராட்சி சொத்து பதிவேட்டில் பதிவு செய்யவும், மேலும் இவ்வாகனங்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் பயன்படுத்திக் கொள்ளவும், இந்நிகழ்வில் ஏற்படும் தொடர் செலவினங்களை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. 6 எண்கள் புதிய மின்கல வாகனங்களை (BOV) சொத்து பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளவும், தொடர் செலவினங்களை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி அளிக்கலாம்.

2. மேற்கண்ட வாகனங்களுக்கு ஏற்படும் தொடர் செலவினத்தை 2022–23ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இலகுரக வாகன பராமரிப்பு கணக்கு (வருவாய் நிதி) தலைப்பு எண்.230501ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.125 லட்சத்தில் இருந்து மேற்கண்ட வாகனங்களின் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கலாம்.

**இ5/ 15398 /2022**(மையம்)

**தீர்மானம் எண்.176 பொருள்:32 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 33**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் 85 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களில் அவ்வப் பொழுது ஏற்படும் பழுது மற்றும் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கான பராமரிப்பு பணிகளை ( உதிரி பாகங்கள் நீங்கலாக ) ( 2 ஆண்டிற்கு ) ஆண்டு ஒப்பந்த ( AMC Labour ) அடிப்படையில் காலதாமதமின்றி உரிய நேரத்தில் மேற்கொள்ள TATA வாகனத் தயாரிப்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட டீலர் **மெசர்ஸ். செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்,** திருச்சிராப்பள்ளி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் மேற்கண்ட பணி காலம் 28.02.2023 உடன் முடிவடைந்து விட்டதால் (01.04.2023 முதல் 31.03.2025) வரை தொடர்ந்து ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட 20.02.2023 ந் தேதிய விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு

| வ . எண் | நிறுவனத்தின் பெயர் | வழங்கியுள்ள விலைப்புள்ளி இரண்டு ஆண்டிற்கு |
|---|---|---|
| 1 . | மெசர்ஸ் . செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் , திருச்சிராப்பள்ளி (Rs.45000 X 85Nos ) | ரூ.38,25,000/– |

மேற்கண்ட பணி காலம் 28.02.2023 உடன் முடிவடைந்து விட்டதால் பணியின் அவசியத்தினை கருதி **மெசர்ஸ். செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்**, திருச்சிராப்பள்ளி நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளி ரூ.38,25,000/-யை ஏற்று ஆண்டு பராமரிப்பு பணியை ஒப்படைத்து மேற்கொள்ளப்படும் பொழுது, மாற்றம் செய்யப்பட வேண்டிய உதிரி பாகங்களை மாற்றிவிட்டு அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் , பட்டியலின் அடிப்படையில் தொகையினை வழங்குவதற்கும் மற்றும் ( 2 ஆண்டிற்கு ) ஆண்டு பராமரிப்பு பணிக்கான (01.04.2023 முதல் 31.03.2025) ( AMC Labour ) கூலி தொகை ரூ.38,25,000/-ஐ காலாண்டு வாரியாக வழங்குவதற்கும் மாமன்ற அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. **மெசர்ஸ். செல்லம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்**, திருச்சிராப்பள்ளி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்பு பணியில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் 85 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களில் அவ்வப் பொழுது ஏற்படும் பழுது மற்றும் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கான பராமரிப்பு பணிகளை ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் காலதாமதமின்றி உரிய நேரத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டிய உதிரி பாகங்களை மாற்றிவிட்டு அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும், பட்டியலின் அடிப்படையில் தொகையினை வழங்குவதற்கும் மற்றும் 2 ஆண்டு பராமரிப்பு பணிக்கான **(01.04.2023 முதல் 31.03.2025) ( AMC Labour )** கூலி தொகை **ரூ.38,25,000/-ஐ** காலாண்டு வாரியாக வழங்குவதற்கும் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவீனத்தை 2023-24ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளலாம்.

**இ5/ 1354 / 2023 ( மையம் )**

**தீர்மானம் எண்.177 பொருள்:33 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 34**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மத்திய மண்டி, சீர் மிகு நகர திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் , பொது தனியார் கூட்டாண்மை திட்டம் மூலம் CFL/SVL/MHL மின் விளக்குகளை LED மின் விளக்குகளாக மாற்றம் செய்து மின் கம்பங்களில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட பழைய மின் பொருள்கள் மைய மண்டிக்கு திருப்பி வரப்பெற்றுள்ளது தற்போது பயனற்ற நிலையில் ஒப்படைக்கப்பட்ட 400w, 250w, 150w,70w, SVL/MHL Fittings wtih choke bulb ignitor holder, 36w CFL fittings, 40w tube lingt fittings. GI Bracket with Post clamp and Aluminiam cableஇதர உதிரி பொருள்கள் ஆக மொத்தம் 19 இனம் மின்பொருள்கள் 'உள்ளது உள்ளபடி' என்ற அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் பொது ஏலத்தில் விட்டு பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய வேண்டி, உள்ளூர் நிறுவனங்களிடமிருந்துபெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது .

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | உத்தேச மதிப்பு |
|---|---|---|
| 1 | Hindusthan scrap Traders, Trichy | ரூ. 44,71,498/- |
| 2 | D. J. Traders, Trichy | ரூ. 41,92,538/- |
| 3 | Lakshmi& Metals Alloys, Trichy | ரூ. 40,80,068/- |
| 4 | Sagayamatha Fabricator, Trichy | ரூ. 39,93,548/- |
| 5 | M.S.K இரும்பு கடை, திருநெல்வேலி. | ரூ. 33,93,342/- |
| 6 | SAIT Auto Parts, Trichy | ரூ. 33,30,770/- |
| 7 | Thenral Traders, Trichy | ரூ. 32,57,368/- |
| 8 | CNG Traders, Trichy | ரூ. 31,24,646/- |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள 8 நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் அதிகபட்ச விலைபுள்ளி தொகை ரூ.**44,71,498/-ம்** மற்ற நிறுவனங்களை காட்டிலும் அதிகமாக உள்ளது. எனவே அதிகபட்ச விலைபுள்ளி தொகை ரூ.**44,71,498/-ஐ** அடிப்படையாக வைத்து 'உள்ளது உள்ளபடி' என்ற அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி மற்றும் ஏலத்தில் விடுவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு :**

அதிகபட்ச விலைப்புள்ளி தொகை ரூபாய். 44,71,498/- ஐ அடிப்படையாக கொண்டு பழைய பொருள்களை ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் விடுவதற்கு அனுமதி வழங்கலாம்.

**(இ6 / 4825 / 2021 (மையம்)**

**தீர்மானம் எண்.178 பொருள்:34 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 35**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மத்திய மண்டி, திருச்சிராப்பள்ளிமாநகராட்சி பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு உடைந்து பழுதான திரும்ப பயன்படுத்த முடியாத CI Values, CI PIPE,CI Bend, CI Reducer, Motor & Pump accessories, Panel board, Old Cable, Tranformer , C.I.Broken pipe மற்றும் இதர உதிரி இரும்பு பொருட்கள் 270 இனங்கள் பிரித்து எடுக்கப்பட்ட பழுதான பொருள்கள் மைய மண்டிக்கு திருப்பி வரப்பெற்றுள்ளது, தற்போது பயனற்ற நிலையில் ஒப்படைக்கப்பட்ட பொருள்கள் 'உள்ளது உள்ளபடி' என்ற அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலத்தில் விட்டு, பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய வேண்டி, உள்ளூர் நிறுவனங்களிடமிருந்துபெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| SL.NO | நிறுவனத்தின் பெயர் | விலை புள்ளி மொத்த தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Hindusthan scrap Traders, Trichy | ரூ.12,74,400 /- |
| 2 | D. J Traders, Trichy | ரூ.12,03,400 /- |
| 3 | Lakshmi& Metals Alloys,Trichy | ரூ.10,97,000 /- |
| 4 | Sagamatha Fabricator, Trichy | ரூ.10,62,000 /- |
| 5 | SAIT Auto Parts, Trichy | ரூ.8,49,600 /- |
| 6 | CNG Traders, Trichy | ரூ.8,31,900 /- |
| 7 | THENDRAL Traders, Trichy | ரூ.7,78,800 /- |
| 8 | M.S.K இரும்பு கடை . திருநெல்வேலி. | ரூ.6,10,000 /- |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள 8 நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் அதிகபட்ச விலைபுள்ளி தொகை ரூ.12,74,400 /- மற்ற நிறுவனங்களை காட்டிலும் அதிகமாக உள்ளது. எனவே அதிக விலைபுள்ளி ரூ.12,74,400 /- ஐ அடிப்படையாக வைத்து 'உள்ளது உள்ளபடி' என்ற அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி மற்றும் ஏலத்தில் விடுவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு :**

அதிகபட்ச விலை புள்ளி தொகை ரூபாய். 12,74,400 /- ஐ அடிப்படையாக கொண்டு பழைய பொருள்களை ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் விடுவதற்கு அனுமதி வழங்கலாம்.

**(இ6 / 11777 / 2021 (மையம்)**

**தீர்மானம் எண்.179 பொருள்:35 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 36**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 29.09.2021, 30.12.2022 மற்றும் 09.02.2023. நாளைய கடிதங்களில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் இயங்கி வரும் வரிவசூல் மையங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் சொத்துவரி, குடிநீர் இணைப்பு, புதைவடிகால் சேவை ஆகியனவற்றிற்கான விண்ணப்பங்களை www.tnurbaneseva.com என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஏதுவாக அதிவேக மற்றும் கட்டுப்பாடுகள் அடங்கிய (VPN Connection) இணையதள இணைப்பு மெசர்ஸ். பி.எஸ்.என்.எல், நிறுவனத்திடம் வாங்கி வழங்கப்பட்டுள்ளதற்கான கேட்பு பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மெசர்ஸ். பி.எஸ்.என்.எல், நிறுவனத்திடம் அதிவேக மற்றும் கட்டுப்பாடுகள் அடங்கிய இணையதள இணைப்பிற்கு உரிய (VPN Connection) மாதாந்திர உபயோக்கட்டணத்தினை <u>01.01.2021 முதல் 30.06.2021 முடிய மற்றும் 01.01.2022 முதல் 31.12.2022</u> வரையிலான காலங்களுக்கு முறையே 16,67,756/- வீதம் ஆறு காலாண்டுகளுக்குரிய உபயோகக்கட்டணத்தொகை ரூ.1,00,06,536/-னை மெசர்ஸ். பி.எஸ்.என்.எல், நிறுவனத்திற்கு உடன் செலுத்த வேண்டுமெனவும் தெரிவித்து முன் தேதியிட்ட கடிதங்கள் தற்போது வரப்பெற்றுள்ளது. **இதில் 01.07.2021 முதல் 31.12.2021 வரையில் இடைப்பட்ட காலத்திற்கான கேட்பு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட நிலையில் அதற்கான சேவைக்கட்டணம் செலுத்தப்பட்டுவிட்டது.**

எனவே, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரைப்படி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி செலுத்தப்பட வேண்டிய உபயோகக்கட்டணத் தொகை **ரூ.1,00,06,536/-னை மெசர்ஸ். பி.எஸ்.என்.எல், டெலிகாம் நிறுவனத்திற்கு** வங்கிக்கணக்கில் நேரிடையாக (**ECS மூலம்**) செலுத்துவதற்கு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1. மெசர்ஸ். பி.எஸ்.என்.எல் டெலிகாம் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய 01/01/2021 முதல் 30/06/2021 முடிய மற்றும் 01/01/2022 முதல் 31/12/2022 வரை உள்ள காலங்களுக்கு உபயோகக் கட்டத் தொகை ரூ.1,00,06,536/-க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2022 - 2023ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் தலைப்பு எண் 2201105ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 110.00 இலட்சத்திலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**சி5/7745/2020(மையம்)**

**தீர்மானம் எண்.180 பொருள்:36 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 37**

ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள். 15.02.2023ன்படி, இவ்வலுவலக பயன்பாட்டிற்கு தேவையான புதிய கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர்கள் ஆகியன கொள்முதல் செய்திட www.gem.gov.in இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 28.02.2023ம் நாளன்று தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டதில், மெசர்ஸ். டோட்டல் சொல்யூசன்ஸ், திருச்சி நிறுவனமானது தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது.

அதனடிப்படையில் GEM/2023/B/3150460 இணையதள ஒப்பந்தப்புள்ளிக்கு GEM Sanction Order No. 511687728216631, முதலான Gem e-marketing place web portal ல் அளித்துள்ள உத்தரவுகளில் மேற்கண்ட நிறுவனமானது இவ்வலுவலகத்திற்கு தேவையான புதிய கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர்கள் ஆகியனவற்றிற்கு அளித்துள்ள விநியோகத் தொகை கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| Sl.No | Description | Qty | Gem Estimate Value | M/s. Total Solutions, Trichy |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | HP Desktop, Core i3, 8GB, 1000GB, 19.5inch Monitor, KeyBoard and Mouse, | 21 | 1491000/- | 1480500/- |
| 2 | Canon Multifunction Printer MF 3010 | 16 | 385216/- | 376000/- |
| 3 | Epson Document Scanner (Duplex) | 1 | 64877/- | 64600/- |
| 4 | Canon A3 Printer With mono function | 1 | 140750/- | 140250/- |
| 5 | Canon Xerox Machine (Multi Function) | 1 | 193440/- | 193000/- |
| **மொத்தம்** | | | **22,75,283/-** | **22,54,350/-** |
| | | | | **-0.92** குறைவு |

மேற்கண்ட பட்டியலில் கண்டவாறு Gem இணையதள மதிப்பீட்டுத் தொகையினை விட 0.92 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெசர்ஸ், டோட்டல் சொல்யூசன், திருச்சி நிறுவனத்தினை ஏற்று Gem இணையத்தில் (**Gem Sanction Order**) கொள்முதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்வலுவலகத்திற்கு தேவையான புதிய கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர்கள் ஆகியனவற்றை மெசர்ஸ். டோட்டல் சொல்யூசன்ஸ், திருச்சி நிறுவனத்திடம் கொள்முதல் செய்து கொள்ளவும். GEM Sanction Order No. 511687728216631, நாள்07.03.2023ன் மீதான ஒப்புதலுக்கும் மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**mYtyf¡F¿¥ò.**

1. இப்பணியினை மேற்கொள்ள ஆணையர் அவர்களது நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையின்படி பத்தி எண் 4ல் குறைந்த ஒப்புந்தப்புள்ளி GEM இணையதளத்தில் அளித்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதனை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. அலுவலகப்பணிகளின் அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதனை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(சி5/14468/2022(மையம்)**

**தீர்மானம் எண்.181 பொருள்:37 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 38**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் – V, வார்டு எண். 55க்குட்பட்ட பிராட்டியூரில் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்நடுநிலைப்பள்ளியில் LKG, UKG மற்றும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை 483 மாணவர்களும், 369 மாணவியர்களும் பயின்று வருகின்றனர்.

இப்பள்ளியில் முழுவதும் ஆங்கில வழிக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டு வருவதால், ஆண்டு தோறும் மாணவ, மாணவியர்களின் சேர்க்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எனவே, கூடுதல் வகுப்பறைகள் போதிய வசதியுடன் தேவைப்படுகிறது.

எனவே, இப்பள்ளியின் அருகில் (நகரளவை எண்.261, வார்டு: AM, பிளாக்.4) தரை தளத்தில் 3703.71 சதுர அடியில் 4 வகுப்பறைகள் மற்றும் 2 கழிப்பறைகள், முதல் தளத்தில் 3703.71 சதுர அடியில் 4 வகுப்பறைகள் மற்றும் 2 கழிப்பறைகள் மற்றும் இரண்டாம் தளத்தில் 3703.71 சதுர அடியில் 4 வகுப்பறைகள் மற்றும் 2 கழிப்பறைகள் கட்டவும், மேலும் கூடுதல் வசதிகளான சீர்மிகு வகுப்பறைகள் மற்றும் கணிணி ஆய்வகம் அமைக்கவும் ரூ.500.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மற்றும் அதன் தொடர்ச்சியாக தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கும் கருத்துரு அனுப்புவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**mYtyf¡F¿¥ò:-**

1. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கும் கருத்துரு அனுப்பியதற்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினம் ரூ.500.00 இலட்சத்தை மாநகராட்சியின் கல்வி நிதி 2022–23லிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**இ8/ 2742 / 2023(மையம்)**

**தீர்மானம் எண்.182 பொருள்:38 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 39**

இம்மாநகராட்சியில் செயல்படும் 18 ஆரம்ப சுகாதார நிலையங்களில் திருவாணைக்கோவில் ஆரம்ப சுகாதார நிலையம், காமராஜ் நகர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பெரிய மிளகு பாறை ஆரம்ப சுகாதர நிலையங்களில் பணிபுரிந்த மருத்துவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில், தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள மருத்துவ பணியிடங்களில் இம்மநகராட்சியில் பணிபுரியும் தற்காலிக மருத்துவர்கள் திரு. ஹக்கீம் மற்றும் திரு. விக்னேஸ்வரன் ஆகியோர்களால் மருத்துவ பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இந்நிலையில் தற்போது இம்மாநகராட்சிக்குட்பட்ட குழுமிக்கரையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிட பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் தொடங்கப்பட உள்ளதை தொடர்ந்து, இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற வரும் நோயாளிகளுக்கு மருத்துவ பணிகள் மேற்கொள்ள மருத்துவர் மற்றும் செவிலியர்கள் பணி அமர்த்தப்பட வேண்டியுள்ளது. இம்மாநகராட்சியில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கூடுதலாக இல்லாத நிலையினை தொடர்ந்து தற்காலிகமாக ஒரு மருத்துவர் மற்றும் இரண்டு செவிலியர்கள் குழுமிக்கரை புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணி அமர்த்தப்பட்டு மருத்துவ பணிகள் மேற்கொள்ளவும் இப்பணியாளர்களுக்கான ஒரு வருட ஊதியத்தொகை ரூ.11,52,000/- க்கு மாமன்ற அனுமதி வேண்டி பொருள் ஏற்புக்கு.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. இப்பபணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி பெற்று ஒரு மருத்துவர் மற்றும் 2 செவிலியர்கள் ஆகியோர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை மாநகராட்சியின் 2023-2024 வரவு செலவு திட்டம் தலைப்பு எண் 2101010 இல் ஒதுக்கீடு செய்யப்பட உள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(எச்7/4351/2021 (மையம்)

**தீர்மானம் எண்.183 பொருள்:39 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 40**

இம்மாநகராட்சியில் ஐந்து வார்டுகுழு அலுவலகங்கள், மகப்பேறு மையங்கள், மருந்தகங்களில் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு 2021-2022 ஆண்டிற்கான இரண்டு தவணை சீருடைகளும் 2022-2023ம் ஆண்டிற்கான இரண்டு தவணை சீருடைகளும் வழங்க கீழ்க்கண்ட அட்டவணையின்படி கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | தூய்மை பணியாளர்களின் சீருடை விவரம் | தற்போது பணிபுரியும் பணியாளர்கள் எண்ணிக்கை | வாங்க வேண்டிய சீருடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஆண் | 620 | 620 x4 = 2480 |
| 2 | பெண் | 458 | 458 x4 = 1832 |
| **மொத்தம்** | | **1078** | |

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்களின் சீருடைகளை தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ், காதி கிராப்ட் மற்றும் கோஆப்டெக்ஸ் பொதிகை அரசு நிறுவனங்களில் கொள்முதல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து காதிகிராப்ட் திருச்சி நிறுவனம் மற்றும் கோ.ஆப்டெக்ஸ் திருச்சி நிறுவனத்திடம் சீருடைகளுக்கான விலைப்புள்ளியினை வழங்கிடுமாறு கோரியதில் M/s கோ.ஆப்டெக்ஸ் திருச்சி நிறுவனம் மட்டுமே சீருடைக்கான விலைப்புள்ளி அளித்துள்ளது. எனவே, M/s கோ.ஆப்டெக்ஸ் திருச்சி நிறுவனத்தின் மேற்கண்ட சீருடைகளின் விலைப்புள்ளியின் படி கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் கண்டுள்ளவாறு கொள்முதல் செய்ய வேண்டிய சீருடைகளின் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | சீருடை விவரம் | துணியின் எண்ணிக்கை | துணியின் அளவு | துணியின் மொத்த அளவு | விலைப் புள்ளித் தொகை ரூ. | மொத்தம் செலவு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | காக்கி சட்டை | 2480 | 1.75 மீ | 4340 மீ | 111.30 / மீ | 4,83,042.00 |
| 2 | காக்கி பேண்ட் | 2480 | 1.30 மீ | 3224 மீ | 206.85 / மீ | 6,66,884.40 |
| 3 | நூல் புடவை (ரவிக்கை துணியுடன்) | 1832 | 6.20 மீ (புடவையின் அளவு) | 1832 எண்கள் | 1033.20 / 1எண் | 18,92,822.40 |
| 4 | ஊதா நிற நூலாடை | 2156 | 1.83 மீ (நூலாடை அளவு) | 2156 எண்கள் | 184.80 / 1எண் | 3,98,428,80 |
| **மொத்தம்** | | | | | | **34,41,177.60** |

மேற்கண்டஅட்டவணையில் கண்டுள்ளவாறு இம்மாநகராட்சியில் பணபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சீருடைகளை கோ.ஆப்டெக்ஸ் திருச்சி நிறுவனத்தில் கொள்முதல் செய்யவும் இதற்கு ஆகும் செலவினம் ரூ.**34,41,178/–** தொகைக்கும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

**அலுவலகக் குறிப்பு:**

1. நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சீருடைகளை கோ.ஆப்டெக்ஸ் திருச்சி நிறுவனத்தில் கொள்முதல் செய்யவும் அதற்கான செலவினத் தொகை ரூ. 34,41,178/–க்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை 2022–2023ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் தலைப்பு எண் 2102004 இன் கீழ் சீருடைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று M/s கோ.ஆப்டெக்ஸ் திருச்சி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

[எச்4/1820/2023 (மையம்)]

**தீர்மானம் எண்.184 பொருள்:40 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 41**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – ஸ்ரீரங்கம் கோட்டம் – வார்டு எண்–4 , நெல்சன் ரோடு விக்னேஷ் அடுக்குமாடி குடியிருப்பு அருகில் ஆண்களுக்கு மூன்று இருக்கைகளும், பெண்களுக்கு மூன்று இருக்கைகளும் கொண்ட நவீன நம்ம டாய்லெட் என்ற கழிப்பிடம் 2011 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டடது. இக்கழிப்பிடம் அமைந்துள்ள இடம் முக்கிய பிரதான போக்குவரத்து அதிகமுள்ள பகுதியாகவும், கல்லூரி மற்றும் அரங்கநாதர் திருக்கோவிலுக்கு செல்லும் முக்கிய வழித்தடமாக உள்ளதால் போக்குவரத்து மிகுந்து காணப்படுகிறது. இக்கழிப்பிடத்தின் கட்டமைப்புகள் இரும்பினால் ஆன அமைப்பில் உள்ளதால் கழிவறைகள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலை உள்ளது.

இப்பகுதியில் இக்கழிப்பிடத்தில் அருகிலேயே ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியே நவீன வசிசதிகளுடன் கூடிய 8 இருக்கைகள் கொண்ட கழிப்பிடம் உள்ளமையால் இந்த நவீன கழிப்பிடத்தை யாரும் பயன்படுத்தாத நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி இக்கழிப்பிடத்தினை அகற்றிட மாமன்றத்திற்கு பொருள் தயார் செய்து அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. இக்கழிப்பிடம் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலை உள்ளதால் அப்புறப்படுத்த அனுமதிக்கலாம்.
2. இக்கழிப்பிடத்தினால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதால் அதனை அகற்றுவதற்கு அனுமதிக்கலாம்.
3. இக்கழிப்பிடம் அருகில் போதிய அளவு கழிப்பிட வசதி உள்ளதால் இக்கழிப்பிடத்தை அகற்ற ஒப்புதல் வழங்கலாம்.
4. அகற்றப்பட்ட பழுதடைந்த இரும்பு பாகங்களை மத்திய இருப்பு மண்டியில் ஒப்படைப்பு செய்து பொது ஏலம் விடுவதற்கு அனுமதி வழங்கலாம்.

**இ1/1889 /2023( ம–1)**

**தீர்மானம் எண்.185 பொருள்:41 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 42**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – ஸ்ரீரங்கம் கோட்டம் – வார்டு எண்–4 , அம்பேத்கார் நகர் சுடுகாடு மெயின் ரோடு அரச மரம் எதிரில் அமைந்துள்ள ஆண்கள் கழிப்பிடம் சாலையின் நுழைவுப் பகுதியில் போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்துள்ளது. மேற்கண்ட கழிப்பிடம் கட்டப்பட்டு 30 வருடங்கள் முடிவடையும் நிலையில் கழிப்பிடத்தின் கழிப்பிடங்கள் மிகவும் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலை உள்ளது. இப்பகுதி மக்கள் மக்களை தேடி முகாமில் இக்கழிப்பிடத்தை அகற்றுமாறு கோரிக்கை மனு அளித்துள்ளனர். எனவே மேற்கண்ட கழிப்பிடத்தினை இடித்து அகற்றிட மாமன்றத்திற்கு பொருள் தயார் செய்து அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. இக்கழிப்பிடம் சாலையின் முகப்பு பகுதியில் உள்ளதால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது.எனவே இதனை அகற்றலாம்.
2. இக்கழிப்பிடம் 30 வருடங்கள் முடிவடையும் நிலையில் உள்ளதால் இதனை அகற்ற ஒப்புதல் வழங்கலாம்.
3. மேற்கண்ட கட்டிடத்தில் தளவாட பொருட்கள் ஏதும் இல்லாத காரணத்தால் மாநகராட்சி மூலம் இடித்து அப்புறப்படுத்தவும் இடித்த பிறகு மாநகராட்சி சொத்து பதிவேட்டில் நீக்கம் செய்யலாம்.

**இ1/1 890 /2023 (ம–1)**

**தீர்மானம் எண்.186 பொருள்:42 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 43**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்–1க்குட்பட்ட தெப்பக்குளம்–வானப்பட்டறைத் தெருவில் அமைந்துள்ள காமாட்சியம்மன் கோவிலின் தேவைக்காகவும், வருகை தரும் பக்தர்களின் தாகத்தினைத் தீர்ப்பதற்காகவும், மேற்படி கோவிலுக்கு புதிதாகக் குடிநீர் இணைப்பு வழங்க கோரியுள்ளதனை தொடர்ந்து குடிநீர் உபவிதி–22(ஆ)ன்படி வழிபாட்டு தலங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு சொத்துவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாலும் வாணப்பட்டறை தெருவில் உள்ள காமாட்சி அம்மன் கோவிலின் குடிநீர் தேவைக்கும் அங்கு வரும் பொதுமக்களுக்காகவும் குடிநீர் இணைப்பு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1. குடிநீர் உபவிதிகள்22(ஆ)ன் படி வழிபாட்டு நிர்வாகம் இணைப்பிற்குறிய அனைத்து சாமான்களையும்,அதற்குண்டான மதிப்பீட்டு தொகையையும் மாநகராட்சியால் விதிக்கப்படும் குடிநீர் கட்டணமும் செலுத்த வேண்டும்.
2. வார்டுகுழு அலுவலகம்–1க்குட்பட்ட தெப்பக்குளம்–வானப்பட்டறைத் தெருவில் அமைந்துள்ள காமாட்சியம்மன் கோவிலின் தேவைக்காகவும், பொதுமக்களின் நலன் கருதியும் குடிநீர் இணைப்பு வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ1/0770/2023(ம–1)**

**தீர்மானம் எண்.187 பொருள்:43 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 44**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண்.05அலுவலகத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் கீழ்கண்ட பட்டியலில் கலம் எண்.2ல் கண்டுள்ள வார்டுகளில் கலம் எண்.3ல் தெரிவிக்கப்பட்டுள்ள தெருக்களில் சொத்துவரி மண்டலம் C யில் புதிய வரி நிர்ணயம் செய்யப்பட்டு கலம் எண்.4ல் கண்டுள்ளவாறு வரிவிதிப்புகள் தற்போது உள்ளது.

இதனைத்தொடர்ந்து பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள தெருக்களுக்குபுதியதாக காலிமனைவரி நிர்ணயம் செய்வதற்கு மண்டலம் நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளது. எனவே கீழ்கண்டபட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள தெருக்களுக்கு புதியதாக காலிமனைவரி நிர்ணயம் செய்வதற்கு கீழ்கண்ட விவரப்படி மண்டலம் நிர்ணயம் செய்து காலிமனைவரி வசூல் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | வார்டு எண். | தெருவின் பெயர் | ஏற்கனவே உள்ள சொத்து வரி விதிப்புகளின் எண்ணிக்கை | காலிமனைவரி நிர்ணயம் செய்யப்பட வேண்டிய மண்டலம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 9 | உறையூர்வடக்குவண்டிக்காரதெரு | 38 | A |
| 2 | 9 | பாண்டமங்கலம்ரோடு | 10 | A |
| 3 | 9 | மேற்குவண்டிக்காரத்தெரு | 5 | A |
| 4 | 23 | கீழசெட்டித்தெரு | 9 | A |
| 5 | 23 | செட்டிபேட்டைதெரு | 7 | A |
| 6 | 23 | திருத்தாந்தோணிபரத்தெருகாந்திபுரம் | 6 | A |
| 7 | 23 | காசிசெட்டிதெரு | 56 | A |
| 8 | 24 | சீனிவாச நகர் 7வது மெயின் ரோடு, 13வது தெரு | 05 | A |
| 9 | 24 | புத்தூர் ஹைரோடு பகுதி | 83 | A |
| 10 | 25 | தெற்குதெரு, உ.கொ.திருமலை | 92 | A |
| 11 | 25 | செல்வம்நகர்தெற்கு, உ.கொ.திருமலை | 23 | A |
| 12 | 25 | எம்.எம். நகர் முதல் தெரு | 75 | A |
| 13 | 25 | எம்.எம். நகர் இரண்டாம் தெரு | | |
| 14 | 25 | எம்.எம், நகர் மூன்றாம் தெரு | | |
| 15 | 25 | எம்.எம், நகர் நான்காம் தெரு | | |
| 16 | 25 | எம்.எம், நகர் ஐந்தாம் தெரு | | |
| 17 | 25 | எம்.எம்.நகர் எஸ்கொயர் என்கிளேவ் | 7 | A |
| 18 | 26 | ஈ.வி.ஆர்ரோடுகுறுக்குதெரு | 45 | A |
| 19 | 26 | அம்மையப்பநகர்காருன்யாகார்டன் | 16 | A |
| 20 | 26 | சாரதாஅவன்யூ, குமரன்நகர் பேங்கர்ஸ்காலனி விஸ்தரிப்பு | 48 | A |
| 21 | 26 | எம்.ஜீ.ஆர்நகர் | 75 | A |
| 22 | 26 | குமரன்நகர் மெயின்ரோடு | 113 | A |
| 23 | 26 | அருணாநகர் விஸ்தரிப்பு | 22 | A |
| 24 | 26 | திரு.வி.க. நகர்விஸ்தரிப்பு | 2 | A |
| 25 | 26 | ஆண்டாள் நகர் | 2 | A |
| 26 | 27 | மதுரம்காலனி | 5 | A |
| 27 | 28 | காமராஜ்நகர் | 45 | A |
| 28 | 28 | சிவபிரகாசம்ரோடு | 205 | A |

அலுவலக குறிப்பு:

மேற்கண்ட பட்டியலில் உள்ள தெருக்களுக்கு கலம் எண்.5ல் கண்டுள்ளவாறு மண்டலம் நிர்ணயம் செய்ய அனுமதி அளிக்கலாம்.

அ1 /3244 / 2023/ம 5

**தீர்மானம் எண்.188 பொருள்:44 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 45**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–1, வார்டு எண்.21, மதர் சுப்பிரியர் புனித சிலுவை மகளிர் கல்லூரிக்கு (Holy Cross College) நிர்ணயம் செய்யப்பட்ட கீழ்கண்ட பட்டியலிலுள்ள மூன்று வரிவிதிப்பு எண்களும் அரசு நிதி பெறும் கல்லூரி கட்டிடங்கள் என்பதால் சொத்துவரி நிர்ணயம் செய்தது ஏற்புடையதல்ல. தமிழ்நாடு மாவட்ட அரசிதழில் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பு தொடர்பாக சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி சுயநிதி கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு மட்டும் சொத்துவரி விதிக்கப்பட்டு வருகிறது. ஆகையால், நிலுவை மற்றும் நடப்பு சொத்துவரி செலுத்தாமல் நிலுவையில் உள்ள இனங்கள் நீக்கம் செய்ய மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | வரிவிதிப்பாளர் பெயர் | நிலுவை மற்றும் நடப்பு தொகை செலுத்தப்படாமல் உள்ள தொகை (2017–18/II முதல் 2022–2023/I, II மார்ச் வரை |
|---|---|---|---|
| 1 | 086/012/02126<br>086/021/901855 | மதர் சுப்பிரியர் புனித சிலுவை மகளிர் கல்லூரி | 618808 |
| 2 | 086/012/02129<br>086/021/902125 | | 1682437 |
| 3 | 086/012/02130<br>086/021/902126 | | 344600 |
| மொத்தம் | | | 2645845 |

எனவே, மேற்கண்ட மூன்று வரிவிதிப்பு எண்கள் மற்றும் நிலுவை மற்றும் நடப்பு தொகை ரூ.26,45,845/– உள்ள சொத்துவரியை கேட்பு மற்றும் கணினியில் நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–1, வார்டு எண்.21, மதர் சுப்பிரியர் புனித சிலுவை மகளிர் கல்லூரிக்கு அரசு நிதி பெறும் கல்லூரி கட்டிடங்களின் நிலுவை மற்றும் நடப்பு சொத்துவரி செலுத்தாமல் நிலுவையில் உள்ள மூன்று வரிவிதிப்பு எண்கள் மற்றும் நிலுவைத் தொகை ரூ.26,45,845/– கேட்பு மற்றும் கணினியில் நீக்கம் செய்ய மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அ4/6538/2022(வா.கு.அ–1)**

**தீர்மானம் எண்.189 பொருள்:45 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 46**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பழைய வார்டு எண்.18, புதிய வார்டு எண்.20 க்கு உட்பட்ட மேலரண் சாலை மற்றும் மரக்கடை பகுதியில் 136497 சதுர அடி கொண்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நிலவாடகை அடிப்படையில் நகராட்சியாக இருந்த காலத்திலேயே 57 நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது.

அரசாணை ( இருபது ஆண்டுகள்) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.12.2000ல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி, நிலவிவரும் சந்தை மதிப்பின் ( Prevalling Market Rate) அடிப்படையில் மேலரண் சாலை பகுதி நிலவாடகை இனங்களுக்கு சதுர அடிக்கு மாத வாடகை மதிப்பு ரூ.11.23/– எனவும், மற்றும் மரக்கடை பகுதி நிலவாடகை இனங்களுக்கு சதுர அடிக்கு மாத வாடகை மதிப்பு ரூ.6.16/– எனவும், நிர்ணயம் செய்யப்படவேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்யப்படாமல், மேலரண் சாலை மற்றும் மரக்கடை பகுதி நிலவாடகை இனங்களுக்கும் சேர்த்து சதுர அடிக்கு மாத வாடகை மதிப்பு ரூ.6/– என மாமன்ற தீர்மானம் எண்.209, நாள்.30.06.2003ன் படி நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி வாடகை மதிப்பு சரியாக உள்ளது என ஊர்ஜிதம் செய்யப்பட்டு 01.04.2001 முதல் வாடகை தொகை செலுத்தப்படவேண்டும் என 22.12.2014 அன்று செயல்முறை உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி உத்திரவு வழங்கப்பட்டு சதுர அடிக்கு ரூ.6/– என்ற அடிப்படையில் 2001 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகையை செலுத்த முன்வராத காரணத்தினால், மாமன்ற தீர்மானம் எண்.267, நாள்.30.12.2014ன் படி மேற்கண்ட இடம் மாநகராட்சி வளர்ச்சிப்பணிக்கு தேவைப்படுவதால் நிலவாடகையின் அடிப்படையில் வழங்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்பட்டு, இடத்தினை காலி செய்து மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்ய 01.01.2015 முதல் 30.06.2015 வரை 6 மாதம் அவகாசம் வழங்கி ஆணையர் அவர்களால் 07.01.2015 அன்று உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி உத்திரவு வழங்கப்பட்டதை எதிர்த்து திருச்சிராப்பள்ளி நில குத்தகை வியாபாரிகள் சங்கம் சார்பாக அதன் செயலாளர் திரு.ஏ.ரபீந்திரன் காமக் என்பவர் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை வழக்கு எண். W.P.(MD)No..22394 of 2016ல் வழக்கு தொடர்ந்து W.M.P.(MD)No..16037 of 2016ல் இடைக்கால தடையுத்தரவு வழங்கப்பட்டு 23.11.2016ஆம் தேதி கீழ்கண்டுள்ளவாறு இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டது.

The Petitioner is directed to pay the current rent at the rate of Rs.3/- per square feet untill further orders to respect of arrears to be payable. the petitioner is directed to deposit Rs.1,00,00,000/- within a period of eight weeks from 30.11.2016.

மேற்காணும் இடைக்கால தீர்ப்பின் படி திருச்சிராப்பள்ளி நில குத்தகை வியாபாரிகள் சங்கம் சார்பாக அதன் செயலாளர் திரு.ஏ.ரபீந்திரன் காமக் என்பவர் ரூ.1,13,24,885/- செலுத்தப்பட்டதை திருச்சிராப்பள்ளி நில குத்தகை வியாபாரிகள் சங்கம் சார்பாக அதன் செயலாளர் என்ற பெயரில் வைப்புத் தொகையில் வரவு வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 01.12.2016 முதல் சதுர அடிக்கு ரூ.3/– வீதம் மாத வாடகை கணக்கீடப்பட்டு செலுத்தப்பட்டும், 23.09.2020 அன்று மாத வாடகை சதுர அடிக்கு நீதி மன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2016 முதல் 31.03.2021 வரை சதுர அடிக்கு ரூ.6/– என நிர்ணயம் செய்யப்பட்டு வாடகை செலுத்தப்பட்டு வந்தது. அதன் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண் | வருடம் | செலுத்திய தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 2016-2017 | 13082489 |
| 2. | 2017-2018 | 3754245 |
| மொத்தம் | | 16836734 |

மேற்கண்ட தொகைகள் அனைத்தும் திருச்சிராப்பள்ளி நில குத்தகை வியாபாரிகள் சங்கம் என்ற பெயரில் வைப்புத் தொகையாக வரவு வைக்கப்பட்டடுள்ளது.

அதன் படி மேற்படி பட்டியலில் கண்டுள்ள வருடங்களில் பெறப்பட்டுள்ள தொகை ரூ.16836734/–ஐ தற்போது 4018 Lease Deposit என்ற தலைப்பில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதில் 2016–2017ஆம் ஆண்டுக்கு ரூ.13082489/– மற்றும் 2017 – 2018ஆம் ஆண்டுக்கு ரூ.3754245/– ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குண்டான மொத்த தொகை ரூ. 1,68,36,734/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகையில் ( Lapsed Deposit) கொண்டு செல்லப்பட்டது.

01.04.2022 முதல் வார்டு மறுவரையறை செய்யப்பட்டதில் வார்டு எண்.20க்குட்பட்ட மேலப்புலிவார்டு ரோடு நிலவாடகை இனங்களுக்கான நிலுவை கேட்பிற்கு 2016–2017 மற்றும் 2017–2018க்கான காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.16836734/–ஐ வார்டு குழு எண்.1 அலுவலகத்தில் பற்று எழுதி (GJV) வார்டு குழு எண்.02 அலுவலகத்திற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நிதி மாற்றம் செய்யவும், மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:–**</u>

1. 2016–2017 மற்றும் 2017–2018க்கான காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.16836734/–ஐ வார்டு குழு எண்.1 அலுவலகத்தில் பற்று எழுதி (GJV) வார்டு குழு எண்.02 அலுவலகத்திற்கு நிதி மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்
2. 2016–2017 மற்றும் 2017–2018க்கு மேலரண் சாலையில் உள்ள நிலவாடகை இனங்களுக்கு உயர்நீதிமன்ற ஆணையின் படி வைப்புத்தொகை வைக்கப்பட்டது. 01.04.2022 முதல் வார்டு மறுவரையறை செய்யப்பட்டதில் வார்டு எண்.20க்கு கேட்பு மாற்றம் செய்யப்பட்டதில் வார்டு குழு அலுவலம் எண்.2ற்கு வரவு வைக்க அனுமதிக்கலாம்.

<u>**அ1 /1561 / 2023 (மண்டலம் .1)**</u>

**<u>தீர்மானம் எண்.190 பொருள்:46 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.</u>**

## பொருள்: 47

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 1 ( ஸ்ரீரங்கம் கோட்டம்)ற்குட்பட்ட சத்திரம் பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள தரைதளத்தில் உள்ள கடை எண்கள்.09,13,14,15,16,27,30,32,35,36,37,38,44,45 மற்றும் உணவுக் கூடம்(Food Court) ஆகியவைகளுக்கு 14.02.2023ம் தேதியன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது, மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விவரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை விவரங்கள் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கடை எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் | | | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விவரம் | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வித் தொகை | வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப் புள்ளி தொகை | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 9 | 1 | S.M.சேட்டு த/பெ செங்குளத்தார் 130,காந்தி நகர்,சிந்தாமணி, திருச்சி-2 | 42000 | 1 | அருன்குமார் த/பெ ஆர்.கணேசன் 14/94, பட்டர்வெர்த் ரோடு திருச்சி-2 | 38500 | கடை எண்.09 க்கு கடந்த 20.01.2022ல் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.சி.யோகேஸ்வரி என்பவர் வைப்பு தொகை ரூ.1,60,000 செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டு அதிகபட்ச மாத வாடகை ஏலத் தொகையான ரூ.67,500/-ஐ கேட்டு மேற்கண்ட கடையை பெற்று கடைக்கான 12 மாத வாடகை தொகை ரூ.8,10,000/-ல், ரூ.4,05,000/-ஐ மட்டுமே செலுத்தியுள்ளார். 12 மாத வாடகை தொகையில் நிலுவையாக ரூ.4,05,000/-ஐ, செலுத்தாத காரணத்தினால் கடையை கையகப்படுத்தி திருமதி.சி.யோகேஸ்வரி செலுத்திய தொகையை பரிமுதல் செய்து மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. 14.02.2023 அன்று நடைபெற்ற மறு ஏலத்தில் 3 நபர்கள் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளி 4 வரப்பெற்றது. வரிசை எண்.1ல் கண்ட திரு.S.M.சேட்டு என்பவரின் ஏலக்கேள்வித் தொகை. ரூ.42000/-உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகையாகும்.கடை எண்.09க்கு மாநகராட்சி நிர்ணயம் செய்த ஒரு மாத வாடகை தொகை ரூ.9,443/- ஆகும்.திரு.S.M.சேட்டு என்பவரின் ஏலக்கேள்வித் தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட ரூ.32,557/- கூடுதலாக உள்ளது. எனவே, திரு.S.M.சேட்டு என்பவரின் உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று கடையை ஒப்படைப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு |
| 2 | 9 | 2 | R.ராஜேஷ்குமார் த/பெ ராமன் 24,பாலாஜி அவன்யூ 4வது குறுக்கு தெரு,பழைய கரூர் ரோடு, மேலசிந்தாமணி | 30500 | 2 | K.கார்திகேயன் த/பெ கண்ணையன் 5,ஆனந்தபுரம், கிழக்கு தெரு, வரகனேரி, திருச்சி-8 | 36130 | |
| 3 | 9 | 3 | V.சிவக்குமார் த/பெ வடிவேல் சாமி 88,கள்ளர் தெரு,பெரிய மிளகுப்பாறை, திருச்சி-1 | 41000 | 3 | R.ஜெயந்தி க/பெ ராஜேஷ் குமார் 24,பாலாஜி அவன்யூ 4வது குறுக்கு தெரு,பழைய கரூர் ரோடு, மேலசிந்தாமணி | 35525 | |
| 4 | 9 | | | | 4 | R.சத்திஸ் குமார் த/பெ அன்பழகன் 63/1கிழபுதுர் மெயின் ரோடு பாலக்கரை திருச்சி-1 | 23456 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 13 | – | – | – | – | – | – | கடை எண்.13க்கு மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |
| 6 | 14 | – | – | – | – | – | – | கடை எண்.14க்கு மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |
| 7 | 15 | – | – | – | – | – | – | கடை எண்.15க்கு மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |
| 8 | 16 | – | – | – | – | – | – | கடை எண்.16க்கு மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |
| 9 | 27 | 1 | G.மோகன்ராஜ் த/பெ கணபதி சுப்ரமணியன் 30,காமாட்சி அம்மன் கோவில் தெரு, உறையூர், திருச்சி–3 | **40500** | | S வினோத் குமார் த/பெ சிகாமணி 9/A, தோப்புத் தெரு,இருத யபுரம் ,திருச்சி–1 | 36500 | கடை எண்.27 க்கு கடந்த 20.01.2022ல் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.எம்.ஜெயந்தி என்பவர் வைப்பு தொகை ரூ.1,60,000 செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டு அதிகபட்ச மாத வாடகை ஏலத் தொகையான ரூ.66,000/–ஐ கேட்டு மேற்கண்ட கடையை பெற்று கடைக்கான 12 மாத வாடகை தொகை ரூ.7,92,000/–ல், ரூ.3,96,000/–ஐ மட்டுமே செலுத்தியுள்ளார். 12 மாத வாடகை தொகையில் நிலுவையாக ரூ.3,96,000/–ஐ, செலுத்தாத காரணத்தினால் கடையை கையகப்படுத்தி திருமதி.எம்.ஜெயந்தி செலுத்திய தொகையை பரிமுதல் செய்து மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. 14.02.2023 அன்று நடைபெற்ற மறு ஏலத்தில் 4 நபர்கள் கலந்து கொண்டனர். ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது. வரிசை எண்.1ல் கண்ட திரு.G.மோகன்ராஜ் என்பவரின் ஏலக்கேள்வித் தொகை. ரூ.40500/–உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகையாகும்.கடை எண்.09க்கு மாநகராட்சி நிர்ணயம் செய்த ஒரு மாத வாடகை தொகை ரூ.9,995/– ஆகும்.திரு.G.மோகன்ராஜ் என்பவரின் ஏலக்கேள்வித் தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட ரூ.30,505/– கூடுதலாக உள்ளது. எனவே, திரு.G.மோகன்ராஜ் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று கடையை ஒப்படைப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 27 | 2 | K.N.அம்பிகாபதி த/பெ நடராஜன் 1/68,வடக்கு தெரு, கூகூர்,லால்குடி, திருச்சி | 3950 0 | | – | – | |
| 11 | 27 | 3 | P.மாரிமுத்து த/பெ பழனியாண்டி 1/53, காந்தி சாலை தெரு,ஆலத்துர், மேலகல்கண்டார் கோட்டை, திருச்சி–11 | 29000 | | – | – | |
| 12 | 27 | 4 | C.M.மெய்யப்பன் த/பெ முருகேசன் 182/57,மதுரை ரோடு, மரக்கடை, திருச்சி | 40000 | – | – | – | |
| 13 | 30 | – | – | – | – | – | – | கடை எண்.30க்கு மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |
| 14 | 32 | – | – | – | | – | – | கடை எண்.35க்கு மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |
| 15 | 35 | – | – | – | – | – | – | கடை எண்.35க்கு மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |
| 16 | 36 | – | – | – | – | – | – | கடை எண்.36க்கு மறுஏலம் / ஒப்பந்த ப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ள வில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப் புள்ளி கோரலாம் |
| 17 | 37 | – | – | – | – | – | – | கடை எண்.37க்கு மறுஏலம் / ஒப்பந்தப் புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ள வில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18 | 38 | – | – | – | – | – | – | கடை எண்.38க்கு மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |
| 19 | 44 | 1 | K.கார்த்திகேயன் த/பெ கிருஷ்ணமூர்த்தி 16, 8வது குறுக்கு தெரு,சீனிவச நகர்,வயலூர் ரோடு,திருச்சி–17 | 31000 | 1 | D.சக்திவேல் த/பெ துரைராஜ் 130,காந்தி நகர்,சிந்தாமணி, திருச்சி–2 | 30000 | கடை எண்.44 க்கு கடந்த 20.01.2022ல் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.ஆர்.நிரேஷ் குமார் என்பவர் வைப்பு தொகை ரூ.1,60,000 செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டு அதிகபட்ச மாத வாடகை ஏலத் தொகையான ரூ.59,000/–ஐ கேட்டு மேற்கண்ட கடையை பெற்று கடைக்கான 12 மாத வாடகை தொகை ரூ.7,08,000/–ல், ரூ.4,00,000/–ஐ மட்டுமே செலுத்தியுள்ளார். 12 மாத வாடகை தொகையில் நிலுவையாக ரூ.3,08,000/–ஐ, செலுத்தாத காரணத்தினால் கடையை கையகப்படுத்தி திரு.ஆர்.நிரேஷ் குமார் செலுத்திய தொகையை பரிமுதல் செய்து மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. 14.02.2023 அன்று நடைபெற்ற மறு ஏலத்தில் 1 நபர் மட்டும் கலந்து கொண்டனர். ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது. வரிசை எண்.1ல் கண்ட திரு.K.கார்த்திகேயன் என்பவரின் ஏலக்கேள்வித் தொகை. ரூ.31000/– உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகையாகும்.கடை எண்.44க்கு மாநகராட்சி நிர்ணயம் செய்த ஒரு மாத வாடகை தொகை ரூ.16,087/– ஆகும்.திரு.K.கார்த்திகேயன் என்பவரின் ஏலக்கேள்வித் தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட ரூ.14,913/– கூடுதலாக உள்ளது. எனவே, திரு.K.கார்த்திகேயன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று கடையை ஒப்படைப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | 45 | – | – | – | 1 | S.முருகானந்தம் த/பெ செங்குளத்தார் 130,காந்தி நகர், சிந்தாமணி, திருச்சி–2 | 10500 | கடை எண்.45 க்கு கடந்த 20.01.2022ல் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.சி.சரவணன் என்பவர் வைப்பு தொகை ரூ.1,60,000 செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டு அதிகபட்ச மாத வாடகை ஏலத் தொகையான ரூ.52,000/–ஐ கேட்டு மேற்கண்ட கடையை பெற்று கடைக்கான 12 மாத வாடகை தொகை ரூ.6,24,000/–ஐ முழுவதும் செலுத்தி கடை நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் மாத வாடகை அதிகமாக இருபதால் தன்னால் கடையை நடத்த இயலாது என்று மாநகராட்சியிடம் கடை எண்.45ஐ ஒப்படைத்து விட்டார். எனவே, மேற்கண்ட காரணத்தினால் கடையை கையகப்படுத்தி திரு.சி.சரவணன் செலுத்திய தொகையை பறிமுதல் செய்து மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. 14.02.2023 அன்று நடைபெற்ற மறு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது. வரிசை எண்.1ல் கண்ட திரு.S.முருகானந்தம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை. ரூ.10500/– உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகையாகும்.கடை எண்.45க்கு மாநகராட்சி நிர்ணயம் செய்த ஒரு மாத வாடகை தொகை ரூ.8,767/– ஆகும்.திரு.S.முருகானந்தம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட ரூ.1,733/– மட்டுமே கூடுதலாக உள்ளது. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |
| 21 | உணவுக் கூடம் | | – | – | – | – | – | உணவுக் கூடம் மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் |

## அலுவலக குறிப்பு

(அ). மேற்கண்ட பட்டியலில் கலம் 9ல் குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் கடை எண்கள் ,09,27, மற்றும் 44 ஆகிய கடைகளின் உயர்ந்த பட்ச ஒப்பந்தபுள்ளியை ஏற்று கடையை ஒப்படைக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
(ஆ கடை எண்கள் 13,14,15,16,30,32,35,36,37,38,45 மற்றும் உணவுக் கூடம்(Food Court)ஆகியவைகளுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(இ) உயர்ந்தபட்ச ஏலதாரர்கள் 12 மாத வாடகையை முழுவதுமாக செலுத்தப்பட்டபின் 2வது கேள்விதாரரின் பொறுப்புத் தொகையை திரும்ப வழங்கலாம்.
(ஈ). மூன்று மற்றும் அதற்கு மேல்உள்ள கேள்விதாரர்களின் பொறுப்புத் தொகையை காசோலையாக திரும்ப வழங்கலாம்

**m1/0009/2022/(வா.கு–1)**

**தீர்மானம் எண்.191 பொருள்:47 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 48**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டுக் குழு 2–க்கு உட்பட்ட குத்தகை இனமான இ.பி.ரோடு கனரக வாகனம் நிறுத்தும் இடம், கடைகள் (1,2,3,4), உணவகம் (Canteen), வியாபார அலுவலகம் (தரை தளம் மற்றும் முதல் தளம்) ஆகியவற்றிற்கு 10.02.2023 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. (முதல் அழைப்பு) ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு

| வ. எண். | இனம் | ஏலம் / ஒப்பந்தப் புள்ளி கோரியவர் விவரம் | ஒப்பந்தப் புள்ளி / ஏலத் தொகை / வாடகை தொகை (ரூபாயில்) | பொறுப்பு தொகை செலுத்திய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | கடை எண் 1 | 1. திரு.A.சதீஸ்குமார் த/பெ.அன்பழகன் 63/1, கீழப்புதூர் மெயின் ரோடு, திருச்சி–1 | 12000 | 200000 வங்கி வரைவோலை எண். 251533 நாள். 09.02.2023 | கடை எண் 1–க்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் நான்கு நபர்கள் கலந்துக் கொண்டனர். அதில் திரு.A.சதீஸ்குமார் (வரிசை எண் 1) என்பவர் கடை எண் 1–க்குரிய ஒப்பந்தப்புள்ளிக்கான வெளிப்புற உறையில் 'உணவகம்" (Canteen) என்று குறிப்பிட்டுள்ளதால் அவருடைய ஒப்பந்தப்புள்ளி மாநகராட்சி விதிமுறைகளின் படி தள்ளுபடி செய்யப்பட்டது. திரு.D.மனோஜ் என்பவர் ரூ.12000–க்கு ஒப்பந்தப் புள்ளி அளித்திருந்தார். இவர் அளித்திருந்த ஒப்பந்தப் புள்ளி தொகை வரிசைஎண் 3 திரு.K.ராஜசேகர் மற்றும் வரிசைஎண் 4 திருமதி.வசந்தி என்பவர் அளித்திருந்த ஒப்பந்தப் புள்ளித் தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே, திரு.D.மனோஜ் என்பவர் அளித்திருந்த உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.12000–ஐ ஏற்கலாம். |
| | | 2. திரு.D.மனோஜ் த/பெ.துரைசாமி 7/47, சத்தியமூர்த்தி நகர், திருச்சி–8 | 12000 | 200000 வங்கி வரைவோலை எண். 784043 நாள். 09.02.2023 | |
| | | 3. திரு.K.ராஜசேகர் த/பெ.கூத்தன் 16/98, ராம்ராஜ் நகர், பாரதி நகர், இ.பி.ரோடு, திருச்சி–8 | 11000 | 200000 DD No. 784044 Dt. 09.02.2023 | |
| | | 4. திருமதி.V.வசந்தி த/பெ.K.வெங்கடேசன் 101/JD ONYX அப்பார்ட்மெண்ட், ஸ்ரீராம் நகர், திருவானைக்கோவில், திருச்சி–8 | 11111 | 200000 வங்கி வரைவோலை எண். 782600 நாள். 09.02.2023 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | கடை எண் 2 | திரு.S.பவுன்ராஜ் த/பெ.செபஸ்தியான் 238/277, காமராஜ் நகர், வடக்கு தாராநல்லூர், திருச்சி–8 | 10000 (ஏலத் தொகை) | 200000 வங்கி வரைவோலை எண். 782601 நாள். 09.02.2023 (ஏலம்) | கடை எண் 2–க்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் திரு.S.பவுன்ராஜ் என்பவர் மட்டுமே கலந்துக் கொண்டார், மேலும், ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. மேலும், திரு.பவுன்ராஜ் என்பவர் ஏல விண்ணப்பத்தில் ரூ.10000/– என குறிப்பிட்டு இருந்ததாலும் ஒருவர் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டதால் ஏலம் நடைபெறவில்லை. எனவே, மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| 3 | கடை எண் 3 | திரு.R.பொன்னன் த/பெ.P.ராமலிங்கம் எண் 22, கிழக்கு தாராநல்லூர், திருச்சி–8 | 10000 | 200000 வங்கி வரைவோலை எண். 251531 நாள். 09.02.2023 | கடை எண் 3–க்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் திரு.R.பொன்னன் என்பவர் மட்டுமே கலந்துக் கொண்டு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே, ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளதால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| 4 | கடை எண் 4 | திரு.S.செந்தில்குமார் த/பெ.D.சேகர் 96, LF, துறையூர் ரோடு, மண்ணச்சநல்லூர், திருச்சி–621005 | 7900 | 200000 வங்கி வரைவோலை எண். 162100 நாள். 09.02.2023 | |
| | | திரு.சு.விக்னேஷ் த/பெ.V.கணேசன் ஜெகதாம்பாள் ஸ்டோர், நேருஜி தெரு, அரியமங்கலம், திருச்சி–10 | 9100 | 200000 வங்கி வரைவோலை எண். 271054 நாள். 09.02.2023 | |
| 5 | உணவகம் | திரு.A.சதீஸ்குமார் த/பெ.அன்பழகன் 63/1, கீழப்புதூர் மெயின் ரோடு, திருச்சி–1 | 15000 | 200000 வங்கி வரைவோலை எண். 251532 நாள். 09.02.2023 | மேற்படி உணவகத்திற்கு (Canteen) ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் திரு.A.சதீஸ்குமார் மட்டுமே கலந்துக் கொண்டார். அதில் ஒப்பந்தப்புள்ளிக்கான வெளிப்புற உறையில் "கடை எண் 1" என குறிப்பிட்டுள்ளதால் மாநகராட்சி விதிமுறைகளின்படி அவருடைய ஒப்பந்தப்புள்ளி தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, மேற்படி இனத்திற்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | விபாபார அலுவலகம் (தரைத்தளம், முதல் தளம்) | ---- | ---- | ---- | மேற்படி வியாபார அலுவலகத்திற்கு ( தரைத் தளம், முதல் தளம் ) ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துக்கொள்ளாத காரணத்தால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| 7 | இ.பி.ரோடு கனரக வானகம் நிறுத்தும் இடம் | ---- | ---- | ---- | கனரக வாகனம் நிறுத்தும் இடத்திற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. ஆகவே, மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |

மேற்காணும் பட்டியலில் கலம் எண் 6ல் குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் கடை எண் 1–க்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.12000/–ஐ ஏற்றும், 3 மாத வாடகைத் தொகை ரூ.36,000/–ஐ கூடுதல் வைப்பு தொகையை செலுத்திய பின்னர் கடையினை ஒப்படைப்பு செய்வதற்கும் மேலும், கடை எண் 2,3,4, உணவகம், வியாபார அலுவலகம் மற்றும் கனரக வாகனம் நிறுத்தும் இடம் ஆகியவற்றிற்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) வரிசை எண் 1 கடை எண் 1–க்கு திரு.D.மனோஜ் என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச வாடகை தொகை ரூ.12000/–ஐ ஏற்றும், 3 மாத வாடகை தொகை ரூ.36,000/–ஐ கூடுதல் வைப்பு தொகையை செலுத்திய உடன் கடையை ஒப்படைக்க அனுமதி அளிக்கலாம்.

ஆ) வரிசை எண் 2 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான விளம்பர செலவினம் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

அ1/001630/ 2022(வா.கு)

**தீர்மானம் எண்.192 பொருள்:48 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 49**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டுக் குழு 2–க்கு உட்பட்ட குத்தகை இனமான இ.பி.ரோடு கனரக வாகனம் நிறுத்தும் இடம், அதற்குள் கட்டப்பட்டுள்ள கடைகள் (2,3,4), உணவகம் (Canteen), வியாபார அலுவலகம் (தரை தளம் மற்றும் முதல் தளம்) ஆகியவற்றிற்கு 15.03.2023 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. (மூன்றாம் அழைப்பு) ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு

| வ. எண். | இனம் | ஏலம் /ஒப்பந்தப் புள்ளி கோரியவர் விவரம் | ஒப்பந்தப் புள்ளி / ஏலத் தொகை /. வாடகை தொகை (ரூபாயில்) | பொறுப்பு தொகைசெலுத்திய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | கடைஎண் 2 | --- | --- | --- | கடை எண் 2–க்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துக்கொள்ளாத காரணத்தால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகோரலாம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | கடைஎண் 3 | --- | --- | --- | கடை எண் 3-க்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துக்கொள்ளாத காரணத்தால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகோரலாம். |
| 3 | கடை எண் 4 | திரு.அ.சத்தீஸ்குமார் த/பெ.அன்பழகன் 63/1, கீழப்புதூர் மெயின் ரோடு, பாலக்கரை, திருச்சி-620 001 | 13500 | 200000 வங்கி வரைவோலை எண். 251568 நாள். 14.03.2023 | கடை எண் 4-க்கு ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை.ஒப்பந்தப்புள்ளியில் மூன்று நபர்கள் மட்டுமே கலந்துக் கொண்டு ஒப்பந்தப்புள்ளிஅளித்துள்ளனர். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.அ.சத்தீஸ்குமார் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை திருமது.V.வசந்தி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை காட்டிலும் ரூ.399 கூடுதலாகவும் திரு.அ.சந்தோஷ்குமார் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளி தொகையை காட்டிலும் ரூ.750 கூடுதலாக உள்ளது. எனவே, திரு.அ.சத்தீஸ்குமார் என்பவர் அளித்திருந்த உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.13500/-ஐ ஏற்று கடை ஒப்படைப்பு செய்ய அனுமதிக்கு. |
| | | திருமதி.V.வசந்தி க/பெ.K.வெங்கடேசன் 101, I.D.ONYX அப்பார்ட்மெண்ட், ஸ்ரீராம் நகர், திருவானைக்கோவில், திருச்சி-620 005 | 13101 | 200000 வங்கி வரைவோலை எண். 343334 நாள். 14.03.2023 | |
| | | திரு.அ.சந்தோஷ்குமார் த/பெ.அன்பழகன் 63/1, கீழப்புதூர் மெயின் ரோடு, பாலக்கரை, திருச்சி-620 001 | 12750 | 200000 வங்கி வரைவோலை எண். 251569 நாள். 14.03.2023 | |
| 4 | உணவகம் | --- | --- | --- | உணவகத்திற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துக்கொள்ளாத காரணத்தால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகோரலாம். |
| 5 | விபாபார அலுவலகம் (தரைத் தளம், முதல் தளம்) | ---- | ---- | ---- | மேற்படி வியாபார அலுவலகத்திற்கு (தரைத்தளம், முதல்தளம்) ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துக்கொள்ளாத காரணத்தால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகோரலாம். |
| 6 | இ.பி.ரோடு கனரக வானகம் நிறுத்தும் இடம் | ---- | ---- | ---- | கனரக வாகனம் நிறுத்தும் இடத்திற்கு ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. ஆகவே, மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகோரலாம். |

மேற்காணும் பட்டியலில் கலம் எண் 6ல் குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் கடை எண் 4-க்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.13500/-ஐ ஏற்றும், 12 மாத வாடகைத் தொகை ரூ.1,62,000/-ஐ செலுத்திய பின்னர் கடையினை ஒப்படைப்பு செய்வதற்கும் மேலும், கடை எண் 2,3, உணவகம், வியாபார அலுவலகம் மற்றும் கனரக வாகனம் நிறுத்தும் இடம் ஆகியவற்றிற்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) வரிசை எண் 3 கடை எண் 4-க்கு திரு.அ.சத்தீஸ்குமார் என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.13500/-ஐ ஏற்றும், 12 மாத வாடகை தொகை ரூ.1,62,000/- செலுத்திய உடன் கடையை ஒப்படைக்க அனுமதி அளிக்கலாம்.

ஆ) வரிசை எண் 1, 2, 4, 5, 6 வரை உள்ள இனங்களுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான விளம்பர செலவினம் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

அ1/004870/ 2022(வா.கு.அ.2)

**தீர்மானம் எண்.193 பொருள்:49 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 50**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டத்தில், 2019 - 2022 ஆண்டின் மூன்றாண்டு குத்தகை இனங்களில் காந்தி சந்தை உட்புறம் உள்ள 3 கட்டண கழிப்பிடங்கள் மற்றும் காந்தி சந்தைக்கு எதிர்புறம் உள்ள டைமண்ட் ஜுப்ளி வளாக கட்டண கழிப்பிடத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்து கொள்ள பொது ஏலம / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.46,01,111/- ( 2019 - 2020 முதலாம் ஆண்டு குத்தகை தொகை) அளித்த குத்தகைதாரர் திரு.E.T.சீனிவாசன் என்பவரின் குத்தகை தொகையை ஏற்று முதலாம் ஆண்டு குத்தகை தொகை ரூ.46,01,111 /- ( 2019-2020) முழுவதும் செலுத்தப்பட்ட பின்னர் திரு.E.T.சீனிவாசன் என்பவருக்கு 01,04,2019 முதல் உரிமம் ஒப்படைப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது.

2020 - 2021 இரண்டாம் ஆண்டு குத்தகை தொகை ரூ.48,31,167/- முழுவதும் செலுத்தப்பட்டுள்ளதால் திரு.E.T.சீனிவாசன் என்பவருக்கு 01.04.2020 முதல், இரண்டாம் ஆண்டுக்கு உரிமம் நீட்டிப்பு செய்யப்பட்டு உரிமம் ஒப்படைப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது.

2020 - 2021 ஆம் ஆண்டு கொரோனா தொற்று நோய் காரணமாக தமிழக அரசால் பொது ஊரடங்கு உத்திரவு வழங்கப்பட்டு 8 மாத காலமாக காந்தி சந்தையுடன் மேற்படி கழிப்பிடங்களும் பூட்டியே இருந்ததால் 31.03.2020 முதல் 30.11.2020 முடிய உள்ள காலத்திற்கு உரிமதாரருக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீட்டு தொகை ரூ.40,60,394/- ஆகும்.

2021 - 2022 மூன்றாம் ஆண்டுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட குத்தகை தொகை ரூ.50,72,775/- ஆகும். ஆனால் குத்தகைதாரர் கொரோனா தொற்று நோய் காரணமாக தமிழக அரசால் பொது ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்ட 8 மாத காலத்திற்கு மேற்படி கழிப்பிடங்கள் பூட்டியே இருந்ததால், திரு.E.T.சீனிவாசன் குத்தகைதாரருக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீட்டு தொகை ரூ.40,60,394/- ஐ அவர் செலுத்தவேண்டிய குத்தகை தொகை ரூ.50,72,725/- ல் கழித்துக் கொண்டு மீதம் உள்ள தொகை ரூ.10,12,381/-ஐ மட்டும் செலுத்தியதால் (01.04.2021 முதல் 31.03.2022 முடிய) மூன்றாம் ஆண்டுக்கு உரிமம் நீட்டிப்பு செய்யப்பட்டு உரிமம் ஒப்படைப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் குத்தகைதாரருக்கு வழங்கபட்ட கழிப்பிடங்களில் காந்தி சந்தை எதிர்புறம் உள்ள டைமண்ட ஜுப்ளி கட்டண கழிப்பிடத்தில் மேற்கூரை இடிந்து விழும் அபாயகர தருவாயில் இருந்ததால் கட்டிடத்தை முற்றிலும் இடித்து விட்டு புதியதாக கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ள 20.04.2020 அன்று கழிப்பிடம் பொறியாளர் பிரிவிற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு (20.04.2020 முதல் 05.09.2021) வரை மொத்தம் 504 நாட்கள் கழிப்பிடம் செயல்படாமல் இருந்தது.

கட்டட பணிகள் முடிவுற்று பொறியாளர் பிரிவு மூலம் 06.09.2021 அன்று வருவாய் பிரிவிற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதனை தொடர்ந்து 06.09.2021 முதல் திரு.E.T. சீனிவாசன் குத்தகைதாரருக்கு மேற்படி கழிப்பிடங்களில் தினசரி கட்டணம் வசூல் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. திரு.E.T.சீனிவாசன் கடந்த 18.08.2021 அன்று காலமாகிவிட்டார். ஏல பொது கட்டுப்பாடு வரிசை எண்.9ன் படி குத்தகை காலத்தில் குத்தகைதாரர் காலமாகிவிட்டால் அவருடைய வாரிசுதாரர்களை குத்தகைதாரர்களாக கருதி, குத்தகை உரிமத்தை தொடர அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து அவருடைய வாரிசுதாரர் திரு.எஸ்.திருவேங்கடம் என்பவருக்கு மேற்படி கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்ய அனுமதி வழங்கப்பட்டு 31.03.2022 அன்று குத்தகை காலம் முடிவுற்றது.

இந்நிலையில் திரு.எஸ்.திருவேங்கடம் என்பவரது 12.10.2021ஆம் தேதிய கடிதத்தில், தனது தகப்பனார் திரு.E.T.சீனிவாசன் என்பவர் 01.04.2019 முதல் 31.03.2022 வரை மூன்றாண்டு காலத்திற்கு காந்தி சந்தை உட்புறம் உள்ள 3 கட்டண கழிப்பிடம் மற்றும் காந்தி சந்தைக்கு எதிர்புறம் டைமண்ட் ஜுப்ளி வளாக கட்டண கழிப்பிடத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்து கொள்ள உரிமம் வழங்கப்பட்ட காலத்தில், டைமண்ட ஜுப்ளி கட்டண கழிப்பிட மேற்கூரை இடிந்து விழும் தருவாயில் இருந்ததால் அவற்றை முற்றிலும் இடித்து விட்டு புதியதாக கட்டடம் கட்ட எடுத்துக்கொள்ளப்பட்ட (20.04.2020 முதல் 05.09.2021 வரை) கழிப்பிடம் செயல்படாத 504 நாட்கள் காலக்கட்டத்திற்கான இழப்பீட்டுத் தொகையை தனியரால் 2022 – 2023ம் ஆண்டு குத்தகை எடுத்து நடத்தப்பட்டுவரும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தின் குத்தகையில், தான் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்கு உளவடைப்பு (Adjustment) செய்து கொள்ள கோரியுள்ளார்.

எனவே, கழிப்பிடம் செயல்படாத 504 நாட்கள் காலத்திற்குண்டான இழப்பீட்டுத் தொகையாக கணக்கிடப்பட்ட தொகை ரூ.16,75,682/–ஐ திரு.எஸ்.திருவேங்கடம் எடுத்துள்ள குத்தகை இனமாகிய இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்குரிய 2022–2023 ஆண்டின் குத்தகை நிலுவைத் தொகைக்கு உளவடைப்பு (Adjustment) செய்து கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

காந்தி சந்தைக்கு எதிர்புறம் டைமண்ட் ஜுப்ளி வளாக கட்டண கழிப்பிடம் மேற்கூரை இடிந்து அபாயகரமான பழுது ஏற்பட்டதால் அவற்றை முற்றிலும் இடித்து விட்டு புதியதாக கட்டடம் கட்டும் பணி நடைபெற்ற (20.04.2020 முதல் 05.09.2021 வரை) 504 நாட்கள் கழிப்பிடம் செயல்படாத காலத்திற்கு கணக்கீடு செய்யப்பட்டு திரு.E.T.சீனிவாசன் குத்தகைதாரருக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூ.16,75,682/–ஐ அன்னார் காலமாகிவிட்டதால், அன்னாரின் வாரிசுதாரர் திரு.எஸ்.திருவேங்கடம் எடுத்துள்ள இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தின் 2022–2023 ஆண்டிற்குரிய குத்தகையில் அன்னார் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவைத் தொகைக்கு உளவடைப்பு (Adjustment) செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**10165 / 2018 / அ1 (வா.கு.அ.II)**

**தீர்மானம் எண்.194 பொருள்:50 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 51**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு அலுவலகம் IV, இனம் IIIல் மத்திய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள பயணிகள் காத்திருப்போர் அறை (குளிரூட்டப்பட்டது) பயணிகள் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மூன்றாண்டு கால உரிமத்திற்கு 12.10.2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்ட விபரப்படி ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு :–

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் விபரம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | ஆண்டு வாடகையாக ஏலம் கோரிய விபரம் |
|---|---|---|---|
| 1 | **திரு. ஆ.சார்லஸ்**<br>த/பெ, ச.ஆரோக்கியசாமி<br>50,மேலத்தெரு,<br>மேலநாஞ்சூர்(போ),'<br>குளத்தூர்(தா),<br>புதுக்கோட்டை | வைப்புத் தொகை – **ரூ.1,00,000/–**<br>வரைசோலை எண். **818729**<br>நாள். **11.10.2022**<br>வங்கியின் பெயர் – **இந்தியன் வங்கி, கிராப்பட்டி, திருச்சி** | **ரூ. 1,81,000/-** |

மேற்கண்ட இனத்திற்கு 12.10.2022ம் தேதி நடைபெற்ற பொது ஏலத்தில் நான்கு ஏலதாரர்கள் கலந்து கொண்டனர்கள். விபரம் கீழ்கண்டவாறு

| வரிசை எண் | ஏலதாரரின் பெயர் மற்றும் விபரம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | ஆண்டு வாடகையாக ஏலம் கோரிய விபரம் |
|---|---|---|---|
| 1 | **திரு. கே.நாகவேந்தன்**<br>த/பெ, வி.குமார்<br>47, மேல புது தெரு, செம்பட்டு, திருச்சிராப்பள்ளி | வைப்புத் தொகை – **ரூ.1,00,000/–**<br>வரைசோலை எண். 065739<br>நாள். **11.10.2022**<br>வங்கியின் பெயர் – **இந்தியன் வங்கி, பாலக்கரை, திருச்சி** | **ரூ. 1,50,000/-** |
| 2 | **திரு. எஸ்.வருண் பிரசாத்**<br>த/பெ, எஸ்.சந்தியாகு ஜான்பீட்டர்,<br>47,சவேரியார் கோவில் தெரு, கூனி பஜார், பீமநகர், திருச்சிராப்பள்ளி | வைப்புத் தொகை – **ரூ.1,00,000/–**<br>வரைசோலை எண். 065738<br>நாள். **11.10.2022**<br>வங்கியின் பெயர் – **இந்தியன் வங்கி, பாலக்கரை, திருச்சி** | **ரூ. 3,92,000/-** |
| 3 | **திரு. டி.இளங்கோவன்**<br>த/பெ, தங்கராஜன்<br>106/பி1, ராஜாகாலனி மெயின் ரோடு, கலெக்டர் ஆபிஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி | வைப்புத் தொகை – **ரூ.1,00,000/–**<br>வரைசோலை எண். 507807<br>நாள். **11.10.2022**<br>வங்கியின் பெயர் – **யூனியன் வங்கி, கண்டோன்மெண்ட், திருச்சி** | **ரூ. 3,95,000/-** |
| 4 | **திரு. என்.சுரேஷ்குமார்**<br>த/பெ, ஏ.நடராஜன்<br>13ஏ,வ.ஊ.சி.சாலை, கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி | வைப்புத் தொகை – **ரூ.1,00,000/–**<br>வரைசோலை எண். 507806<br>நாள். **11.10.2022**<br>வங்கியின் பெயர் – **யூனியன் வங்கி, கண்டோன்மெண்ட், திருச்சி** | **ரூ. 1,70,000/-** |

மேற்கண்ட புதிய குத்தகை இனத்திற்கு நான்கு ஏலதாரர்கள் கலந்து கொண்டனர், இதில் வரிசை எண். 3ல் கண்டுள்ள திரு. டி.இளங்கோவன் என்பவர் உயர்ந்தபட்சமாக குத்தகை தொகையாக **ரூ.3,95,000/–** என ஏலத்தில் கோரியுள்தால் இவரது உயர்ந்தபட்ச தொகையினை ஏற்று திரு.டி.இளங்கோவன் என்பவருக்கு மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் 14.10.2022 முதல் வழங்கப்பட்டதற்கும், குத்தகை தொகை வசூல் செய்யப்பட்டதற்கும் மாமன்றம் பின்னேற்பு அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :–</u>**

அ. குத்தகை இனம் எண். III – மத்திய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள பயணிகள் காத்திருப்போர் அறை (குளிரூட்டப்பட்டது) பயணிகள் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2022–2025 மூன்றாண்டுகால குத்தகை உரிம இனத்திற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் திரு.டி.இளங்கோவன் என்பவரின் ஏலத்தொகையினை ஏற்று 14.10.2022 முதல் ஒப்படைத்தமைக்கு மாமன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம். இதற்கு மேல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரினாலும் மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு மேல் ஏலம் போக வாய்ப்பில்லை என்பதால் வருவாய் இழப்பினை தவிர்க்கும் வகையில் வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஏலம் / மறு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

ஆ) மேலும் அரசாணை (நிலை) எண். 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள். 25.05.2009ன் படியும், மாமன்ற தீர்மானம் எண்.720, நாள்.31.12.2021ன் வரிசை எண்.9ல் தெரிவித்துள்ளபடி, 2023–2024 இரண்டாம் ஆண்டிற்கு முதலாம் ஆண்டு குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வும், 2024–2025 மூன்றாம் ஆண்டிற்கு இரண்டாம் ஆண்டு குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வுடன் கூடிய குத்தகை தொகை வசூல் செய்யவும் அனுமதி அளிக்கலாம்.

**அ1/2479/2022 (ம–4)**

**தீர்மானம் எண்.195 பொருள்:51 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 52**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு அலுவலகம் IV, இனம் Iல் வரிசை எண் 3ல் மத்தியபேருந்து நிலையம், முந்தைய பொருட்கள் வைக்கும் அறை (மத்தியபேருந்து நிலையம் பயனிகள் தங்கும் விடுதி கீழ் பகுதியில் நடைபாதையில் உள்ள 78 சதுரஅடி கட்டிடம் (தஞ்சாவூர் பேருந்து நிலையம் அருகில்) மாத வாடகை அடிப்படையில் 12.10.2022 அன்று மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்ட விபரப்படி மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு :–

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் விபரம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | மாத வாடகை கோரிய விபரம் |
|---|---|---|---|
| 1 | **திரு. ரா.செல்வராசு**<br>த/பெ, ராமரெட்டி<br>28, ரெட்டியார் தெரு, செவந்தாம்பட்டி, தாத்தையங்கார்பேட்டை, முசிறி, திருச்சிராப்பள்ளி | வைப்புத் தொகை – **ரூ.1,00,000/–**<br>வரைசோலை எண். **594216**<br>நாள். **11.10.2022**<br>வங்கியின் பெயர் – **தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, தில்லைநகர், திருச்சி** | **ரூ. 10,000/-**<br>**(ஆண்டு வாடகையாக ரூ.1,20,000/– என குறிப்பிட்டுள்ளார்**) |

மறுஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

மறு ஒப்பந்தப்புள்ளியில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது.

30.06.2022ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட இனத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றது. அதில் திரு.வி.பழனிச்சாமி ஒப்பந்த்தாரர் என்பவர் மாத வாடகை ரூ.9100/– க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்.

மேற்கண்ட இனத்திற்கு 12.10.2022ல் திரு. ரா.செல்வராசு, ஒப்பந்த்தாரர் என்பவர் ஆண்டு வாடகையாக ரூ.1,20,000/– கணக்கீடு செய்யப்பட்டதில் மாத வாடகையாக **ரூ.10000/–** என முந்தைய வாடகையைவிட அதிகமாக கோரியதால் திரு.ரா.செல்வராசு என்பவருக்கு மாத வாடகை அடிப்படையில் 15.11.2022 முதல் அனுமதி வழங்கப்பட்டதற்கும், உரிமம் வைப்புத் தொகை வசூல் செய்யப்பட்டதற்கும் மாமன்றம் பின்னேற்பு அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :–</u>**

அ) இனம் Iல் வரிசை எண் 3ல் மத்தியபேருந்து நிலையம், முந்தைய பொருட்கள் வைக்கும் அறை (மத்தியபேருந்து நிலையம் பயனிகள் தங்கும் விடுதி கீழ் பகுதியில் நடைபாதையில் உள்ள 78 சதுரஅடி கட்டிடம் (தஞ்சாவூர் பேருந்து நிலையம் அருகில்) மாத வாடகை அடிப்படையில் திரு. ரா.செல்வராசு, ஒப்பந்த்தாரர் என்பவர் மாத வாடகையாக **ரூ.10000/–** என முந்தைய வாடகை தொகை ரூ.9,100/–ஐ விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதால் இவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேலும் அரசாணை (நிலை) எண். 92, நாள். 03.07.2007ன் படியும், மாமன்ற தீர்மானம் எண்.183 மற்றும் 184 நாள். 05.08.2005ல் தெரிவித்துள்ளபடி, மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாத வாடகை தொகையில் 15 சதவீதம் உயர்வுடன் கூடிய தொகை வசூல் செய்யவும் அனுமதி அளிக்கலாம்.

**அ1/2479/2022 (ம–4)**

**தீர்மானம் எண்.196 பொருள்:52 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 53**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, நான்காவது மண்டலம், வார்டு எண்.54 வெஸ்ட்ரி ஆங்கிலோ இந்தியன் பள்ளி விளையாட்டு மைதானத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் 13.01.2023 முதல் 26.02.2023 வரை 45 நாட்களுக்கு அரசு பொருட்காட்சி நடைபெற்றதில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சார்பில் அரங்கம் அமைக்கும் பணிக்கு தேவையான பந்தல் அமைப்புகள், விளம்பர பலகை, Minature Model ஆகிய பணிகளை மேற்கொள்தற்கு, ரூ.24.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டு விலையை விட 0.07 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் விலைப்புள்ளி வழங்கிய M/s. Wonderland Exhibitors, சென்னை, நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை, மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ1/1930/2023(மையம்)**

**தீர்மானம் எண்.197 பொருள்:53 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 54**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.05, வார்டு எண்.28க்குட்பட்ட குழுமிக்கரை சாலையில் அமைந்துள்ள நுண்உர செயலாக்க மையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்யும் போது, மையத்தின் அருகில் உள்ள மாநகராட்சி இடத்தில் அதிகமான குப்பைகள் மற்றும் கழிவுகள் இருப்பதால், அருகில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதாரகேடு மற்றும் தூர்நாற்றம் வீசுவதால், உடனடியாக அகற்றி சுத்தம் செய்யுமாறு கோரியுள்ளார். எனவே, இம்மையத்தினை அருகில் உள்ள கழிவுகளை தனியார் கனரக வாகனங்கள் மூலம் அகற்றும் பணியினை மேற்கொள்ள **ரூ.9.65** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.19** % சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் **திரு.கே.கலிவரதன்,** திருச்சி, ஒப்பந்தக்காரர் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு **15**ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ2/620/2023(மை)**

**தீர்மானம் எண்.198 பொருள்:54 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 55**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.05, வார்டு எண்.28க்குட்பட்ட அண்ணாநகர் சிவபிராகசம் சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி இடத்தில் குப்பை மற்றும் கழிவுகள் அதிகம் இருப்பதால், அருகில் உள்ள பொதுமக்களுக்கு துர்நாற்றம் வீசி சுகாதாரகேடு உருவாகும் சூழ்நிலை உருவாகிறது. எனவே, அப்பகுதியில் உள்ள கழிவுகளை தனியார் கனரக வாகனங்கள் மூலம் அகற்றும் பணியினை உடனடியாக மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, வார்டு எண்.28க்குட்பட்ட அண்ணாநகர் சிவபிரகாசம் சாலையில் உள்ள மாநகராட்சி இடத்தில் குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றும் பணியினை மேற்கொள்ள **ரூ.9.35** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.19** % சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் **திரு.பி.கலிவரதன்,** திருச்சி, அவர்கள் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு **15**ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ2/621/2023(மை))**

**தீர்மானம் எண்.199 பொருள்:55 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 56**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47 அண்ணா ஸ்டேடியத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று வருகைபுரிந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சர்.சி.வி.ராமன் பூங்கா மற்றும் கீழரண்சாலை கனரக சரக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய முடிக்கப்பட்டுள்ள திட்ட பணிகளை திறக்கவுள்ள நிகழ்ச்சியில் தற்காலிக கழிப்பிடங்கள் மற்றும் அதற்கான தடுப்புகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள ரூ.16.65 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.07% சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி நிறுவனத்தார் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ3/16686/2022 (மையம்)**

**தீர்மானம் எண்.200 பொருள்:56 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 57**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47 அண்ணா ஸ்டேடியத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று வருகைபுரிந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சர்.சி.வி.ராமன் பூங்கா மற்றும் கீழரண்சாலை கனரக சரக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய முடிக்கப்பட்டுள்ள திட்ட பணிகளை திறக்கப்பட்ட நிகழ்ச்சியில் அரங்கம் அமைத்து, Miniature Model முறையில் பயன்பாட்டினை தெரிவிக்கவும் அதற்கான வீடியோ ஒளிபரப்பும் பணியினை மேற்கொள்ள ரூ.28.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.11% சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு.ஜி.வெங்கடேஷ், திருச்சி அவர்கள் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ3/16687/2022 (மையம்)**

**தீர்மானம் எண்.201 பொருள்:57 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 58**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47 அண்ணா ஸ்டேடியத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று வருகைபுரிந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சர்.சி.வி.ராமன் பூங்கா மற்றும் கீழரண்சாலை கனரக சரக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய முடிக்கப்பட்ட திட்ட பணிகளை திறந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சுவர் 40m கட்டுதல், நடைபாதை மராமத்து, ஹாஸ்டல் கட்டிடங்கள் மராமத்து செய்து பெயிண்டிங் பணியினை மேற்கொள்ள ரூ.19.24 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.11% சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி நிறுவனத்தார் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ3/16689/2022 (மையம்)**

**தீர்மானம் எண்.202 பொருள்:58 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 59**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 2, வார்டு வார்டு எண்.47 அண்ணா ஸ்டேடியத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று வருகைபுரிந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சர்.சி.வி.ராமன் பூங்கா மற்றும் கீழரண்சாலை கனரக சரக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய முடிக்கப்பட்டுள்ள பணிகளை திறக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு வரும் வழியில் உள்ள ROB அரசு கட்டிட சுற்றுச்சுவர்கள், மன்னார்புரம் Over Bridge 5500 ச.மீ. பெயிண்டிங் செய்யும் பணியினை மேற்கொள்ள ரூ.12.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.09% சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.ஏ.பி.டி.கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி நிறுவனத்தார் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ3/16691/2022 (மையம்)**

***தீர்மானம் எண்.203 பொருள்:59 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.***

**பொருள்: 60**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47 அண்ணா ஸ்டேடியத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று வருகைபுரிந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சர்.சி.வி.ராமன் பூங்கா மற்றும் கீழரண்சாலை கனரக சரக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய முடிக்கப்பட்டுள்ள திட்ட பணிகளை திறக்கப்பட்ட நிகழ்ச்சியில் அண்ணா ஸ்டேடியத்தின் உட்புற சுவர்கள் பேட்மின்டன் விளையாடுமிடம் மற்றும் கிழக்கு பகுதியில் உள்ள ஹாக்கி விளையாடுமிடம் ஆகிய பகுதிகளில் உள்ள சுவர்களில் பெயிண்டிங் செய்யும் பணியினை மேற்கொள்ள ரூ.18.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.06% சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.தீக் அண்ட் கோ., திருச்சி நிறுவனத்தார் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ3/16692/2022 (மையம்)**

***தீர்மானம் எண்.204 பொருள்:60 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.***

**பொருள்: 61**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47 அண்ணா ஸ்டேடியத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று வருகைபுரிந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சர்.சி.வி.ராமன் பூங்கா மற்றும் கீழரண்சாலை கனரக சரக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய முடிக்கப்பட்டுள்ள திட்ட பணிகளை திறக்கப்பட்ட நிகழ்ச்சியில் விழா பந்தல் அமைக்கும் இடத்தின் உட்புற பகுதியில் பேட்மின்டன் விளையாடுமிடம் மற்றும் ஹாக்கி விளையாடுமிடம் எதிரில் வடக்கு பக்கம் உள்ள விழா மேடைக்கு அருகில் உள்ள பகுதிகளில் சரளை மண் நிரப்பும் (Coarse Gravel) பணியினை மேற்கொள்ள ரூ.52.35 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.05% சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். தீக் அண்ட் கோ., திருச்சி நிறுவனத்தார் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ3/16694/2022 (மையம்)**

***தீர்மானம் எண்.205 பொருள்:61 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.***

**பொருள்: 62**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47 அண்ணா ஸ்டேடியத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று வருகைபுரிந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சர்.சி.வி.ராமன் பூங்கா மற்றும் கீழரண்சாலை கனரக சரக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய முடிக்கப்பட்டுள்ள திட்ட பணிகளை திறக்கப்பட்ட நிகழ்ச்சியில் விழா பந்தல் அமைக்கும் இடத்தின் வடக்கு பக்கம் உள்ள அண்ணா விளையாட்டரங்கம் அருகில் சட்டக் கல்லூரி பகுதியில் சரளை மண் நிரப்பும் (Coarse Gravel) பணியினை மேற்கொள்ள ரூ.41.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.05% சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.தீக் அண்ட் கோ., திருச்சி நிறுவனத்தார் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ3/16695/2022 (மையம்)**

**தீர்மானம் எண்.206 பொருள்:62 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 63**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47க்குட்பட்ட அண்ணா ஸ்டேடியத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று வருகைபுரிந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சர்.சி.வி.ராமன் பூங்கா மற்றும் கீழரண்சாலை கனரக சரக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய முடிக்கப்பட்டுள்ள திட்ட பணிகளை திறக்கும் நிகழ்ச்சியில் விழா பந்தல் அமைக்கும் இடத்தின் உட்புற கிழக்கு பகுதியில் உள்ள ஹாக்கி விளையாடுமிடம் மற்றும் ஈ.வெ.ரா. கல்லூரி சாலைகளில் மேடு பள்ளமாக இருக்கும் பகுதிகளில் Wet Mix Macadam முறையில் சீரமைக்கும் பணியினை மேற்கொள்ள ரூ.59.95 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.05% சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.தீக் அண்ட் கோ., திருச்சி நிறுவனத்தார் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ3/16696/2022 (மையம்)**

**தீர்மானம் எண்.207 பொருள்:63 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 64**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47 அண்ணா ஸ்டேடியத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று வருகைபுரிந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சர்.சி.வி.ராமன் பூங்கா மற்றும் கீழரண்சாலை கனரக சரக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய முடிக்கப்பட்ட திட்ட பணிகளை திறந்த நிகழ்ச்சியில் விழா பந்தல் அமைக்கும் இடத்தில் செல்லும் வழியிலும், நுழைவாயிலும், பந்தலினை சுற்றிலும், நடைபாதையிலும் 200w LED விளக்குகள் 145 எண்ணிக்கைகள் எரியவிடும் வகையிலும், விழா தினத்தினையொட்டி வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் பந்தலின் பக்கவாட்டிலும் 44 விளக்குகள் வயரிங் பணிகள் செய்து எரியவைக்கவும், இதற்கான 62.5kva ஜெனரேட்டர் வாடகைக்கு அமர்த்தும் பணியினை மேற்கொள்ள ரூ.9.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.08% சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். பவர் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், திருச்சி நிறுவனத்தார் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ3/16702/2022 (மையம்)**

**தீர்மானம் எண்.208 பொருள்:64 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 65**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் எண் – IV, வார்டு எண். 60க்குட்பட்ட கலெக்டர் குடியிருப்பு வழியாக 1000 எம் எம் விட்டமுள்ள R.C.C Pipe மூலம் பாதாள சாக்கடை கழிவுநீர் உந்து குழாய் அண்ணா ஸ்டேடியம் பாதாள சாக்கடை கழிவுநீர் நீரேற்று நிலையத்தில் இருந்து பஞ்சப்பூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்கிறது. மேற்கண்ட 1000MM விட்டமுள்ள கழிவுநீர் உந்து குழாயில் காஜாமலை மட்டன் ஸ்டால் அருகில் உடைப்பு ஏற்பட்டதால், சாலையில் கழிவுநீர் கசிந்து வெளியேறி சுகாதாரக்கேடு விளைவிப்பதை தவிர்க்கும் பொருட்டு, உடனடியாக சேதமடைந்த R.C.C உந்து குழாய்களை அகற்றி புதிய 1000 MM Dia DI அமைக்கவும், பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ள ரூ7.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீடு விலையை காட்டிலும் **0.05%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த **M/s. Vishwa Infrastructures** ஒப்பந்ததாரர் மூலம், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/16706/2022 மையம்**

**தீர்மானம் எண்.209 பொருள்:65 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 66**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் மூன்றாண்டு குத்தகை மூலம் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டு வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாடகை பிரதி மாதம் 10 ஆம் தேதிக்குள் மாநகராட்சிக்கு செலுத்தவேண்டியது. 10ஆம் தேதிக்குள் வாடகை செலுத்தாதவர்களுக்கு தண்டக்கட்டணமாக வாடகை தொகையில் ரூ.100/–க்கு ரூ.2/– என்ற அடிப்படையில் தண்டக்கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இத்தண்டக்கட்டணம் கேட்பாக எழுப்பப்படும் போது வாடகை செலுத்துவோருக்கு மிகப்பெரிய நிதி சுமை ஏற்படுகிறது. மேலும், வாடகை செலுத்தும் போது தண்டக்கட்டணத்திற்கு தொகை முதலில் வரவு எடுத்துக்கொண்டு பிறகு வாடகை வரவாகிறது. இச்செயல் வாடகை செலுத்துவோருக்கு பாதிக்கப்படுகிறது.

மேற்கண்ட பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை இயக்குநர் அவர்களிடம் பல்வேறு புகார்கள் வரப்பெற்றதால், நகராட்சி நிர்வாக இயக்கநர் அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.32894/ஆர்.2/2022, நாள்.05.12.2022ல் அரசாணை (நிலை) எண்.155, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.10.2022 ல் குத்தகை மற்றும் இதர வருவாய் ஈட்டும் இனங்களில் உள்ள குறைபாடுகளை தீர்வு செய்வது தொடர்பாக அரசளவில் "வழிகாட்டு குழு" அமைக்கப்பட்டுள்ளதால் தண்டக்கட்டணம் வசூல் செய்வது குறித்து "வழிகாட்டு குழுவில்" முடிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதால் அக்குழுவில் முடிவு எடுக்கப்படும் வரை தண்ட கட்டணம் வசூலிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநரக தொலைபேசியில் வேறு எந்த மாநகராட்சியிலும் தண்டக்கட்டணம் வசூல் செய்யப்படுவதில்லை. ஆனால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மட்டும் தண்டக்கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருவதை "வழிகாட்டு குழுவில்" முடிவு செய்யப்படும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் மூன்றாண்டு குத்தகை மூலம் வாடகை செலுத்துவோருக்கு தண்டக்கட்டணம் வாடகை தொகையை விட அதிகமாக நிலுவை உள்ளதால் இதனை வரன்முறை படுத்தும் வகையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உள்ள 2451 குத்தகை இனங்களின் வாடகைக்கு விதிக்கப்பட்ட தண்டக்கட்டணம் வசூல் செய்வதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

அரசாணை (நிலை) எண்.155, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.10.2022 ல் குத்தகை மற்றும் இதர வருவாய் ஈட்டும் இனங்களில் உள்ள குறைபாடுகளை தீர்வு செய்வது தொடர்பாக அரசளவில் "வழிகாட்டு குழு" அமைக்கப்பட்டுள்ளதால் தண்டக்கட்டணம் வசூல் செய்வது குறித்து "வழிகாட்டு குழுவில்" முடிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதால் அக்குழுவில் முடிவு எடுக்கப்படும் வரையும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உள்ள 2451 குத்தகை இனங்களின் வாடகைக்கு விதிக்கப்பட்ட தண்டக்கட்டணம் வசூல் செய்வதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க அனுமதி அளிக்கலாம்.

**அ1 / 4229 / 2022 ( மையம்)**

**தீர்மானம் எண்.210 பொருள்:66 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:67**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்–1க்குட்பட்ட 13 வார்டுகளில் நடப்பு 2022–2023–ஆம் நிதியாண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் 100 சதவீதம் வசூல் செய்திட ஏதுவாக தீவிர வரி வசூல் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி வருவாய் இனங்களில் நிலுவைத் தொகையில் 38.34 சதவீதம் மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளது. வார்டு வாரியாக நிலுவையில் உள்ள கேட்பு எண்களை நடப்பு கேட்பு எண்ணுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டதில் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டப்பட்டதற்கு தற்கால மதிப்பின் படி புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு, வசூல் செய்யப்பட்டு வருகிறது. மொத்த கேட்பில் ஏற்கனவே நீக்கம் செய்யப்பட வேண்டிய பழைய வரியினங்களான சொத்துவரி, காலிமனை வரி, குடிநீர் கட்டணம், புதைவடிகால் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் (Non Tax) ஆகிய வசூல் செய்யத்தக்க இயலாத இனங்களும் சேர்ந்துள்ளதால், வசூல் செய்ய வேண்டிய கேட்பிற்கு கூடுதலாக நீக்கம் செய்ய வேண்டிய வரியினங்கள் சேர்ந்து மொத்த கேட்பில் உள்ளது.

அதனை சரி செய்யும் பொருட்டு பதிவேடுகளை பரிசீலனை செய்தும், பொதுமக்களிடம் இரட்டை வரியினங்களை மனுக்கள் பெற்றும், உரிய அலுவலரால் தல ஆய்வு செய்யப்பட்டும், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பரிசீலனை செய்யப்பட்டும், அதன் அடிப்படையில் வார்டுவாரியாக வசூலிக்க இயலாத இனங்களுக்கான கேட்பு (Erroneous) பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு

**<u>பட்டியல்</u>**

**<u>திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் –1 வசூலிக்கத்தக்க இயலாத வரி இனங்கள் விவரம்</u>**

| சொத்து வரி | | | காலிமனை வரி | | குடிநீர் கட்டணம் | | புதை வடிகால் கட்டணம் | | தொழில் வரி | | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வார்டு.எண் | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரி விதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | |
| 1 | 21 | 146563 | 79 | 271106 | 5 | 88640 | 22 | 209130 | 42 | 209894 | 925333 |
| 2 | 150 | 671809 | 48 | 207806 | 100 | 521295 | 0 | 0 | 48 | 284338 | 1685248 |
| 3 | 149 | 199582 | 139 | 135432 | 48 | 938053 | 0 | 0 | 42 | 449945 | 1723012 |
| 4 | 11 | 259239 | 0 | 0 | 13 | 440263 | 0 | 0 | 8 | 44647 | 744149 |
| 5 | 70 | 878156 | 0 | 0 | 0 | | 0 | 0 | 0 | 0 | 878156 |
| 6 | 64 | 397603 | 185 | 1021396 | 13 | 174665 | 37 | 190140 | 112 | 375281 | 2159085 |
| 7 | 19 | 367809 | 0 | 0 | 6 | 80420 | 10 | 90930 | 47 | 241878 | 781037 |
| 12 | 13 | 307569 | 0 | 0 | 23 | 407710 | 0 | 0 | 9 | 74755 | 790034 |
| 13 | 23 | 225324 | 0 | 0 | 0 | | 0 | 0 | 0 | 0 | 225324 |
| 14 | 11 | 130176 | 0 | 0 | 152 | 534716 | 0 | 0 | 105 | 685594 | 1350486 |
| 15 | 7 | 147128 | 77 | 820624 | 15 | 317340 | 16 | 154680 | 54 | 243106 | 1682878 |
| 19 | 0 | 0 | 0 | 0 | 0 | | 0 | 0 | 48 | 324734 | 324734 |
| 21 | 37 | 1035758 | 0 | 0 | 72 | 340444 | 0 | 0 | 37 | 1035758 | 2411960 |
| மொத்தம் | 575 | 4766716 | 528 | 2456364 | 447 | 3843546 | 85 | 644880 | 552 | 3969930 | 15681436 |

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–1, வார்டு எண்.19 மற்றும் 21ல் கீழ்கண்ட 7 வரியில்லா இனங்களில் சாலை வசதி, மாநகராட்சி கட்டிடம், கழிவுநீர் செல்லும் பாதை போன்ற காரணங்களினால் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள கடைகள் அகற்றப்பட்டும், மற்றும் சில காரணங்களால் வசூலிக்கத்தக்க இயலாத வரியில்லா இனங்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு

| வார்டு எண் | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 19 | 6 | 3637307 |
| 21 | 1 | 104472 |
| **கூடுதல்** | | **3741779** |

மேற்கண்ட பட்டியலில் கண்ட வசூலிக்கத்தக்க இயலாத வரி இனங்களின் தொகை ரூ.1,56,81,436 மற்றும் வரியில்லா இனங்கள் தொகை ரூ.37,41,779/– அனைத்தும் வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கேட்புத் தொகையாக ரூ.1,94,23,215/– (Erroneous Demand) இருப்பதால் மேற்படி கேட்புத் தொகையை கணினியில் இருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

ஏற்கனவே பழைய வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டு நடப்பு வரை தொகை செலுத்தப்பட்டுவிட்டதாலும், இரண்டு வரிவிதிப்பு எண்கள் உள்ள இனங்களில் ஒரு வரிவிதிப்பு எண்களுக்கான கேட்புத் தொகைகள் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கேட்புத் தொகையாக (Erroneous Demand) இருப்பதாலும், பழைய வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரிவிதிப்பு எண்ணில் வரித்தொகை நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருவதால் இதில் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் கேட்புத் தொகை ரூ.1,56,81,436 + ரூ.37,41,779 = ரூ.1,94,23,215/–ஐ மற்றும் வரிவிதிப்பு எண்ணினை கணினியில் இருந்து நீக்கம் செய்ய அனுமதி அளிக்கலாம்.

**அ1 /1774 / 2023 (வா.கு–1)**

**தீர்மானம் எண்.211 பொருள்:67 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:68**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்–2க்குட்பட்ட 13 வார்டுகளில் நடப்பு 2022–2023–ஆம் நிதியாண்டில் வரிமற்றும் வரியில்லா இனங்களில் 100 சதவீதம் வசூல் செய்திட ஏதுவாக தீவிர வரி வசூல் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படிவருவாய்இனங்களில்நிலுவைத் தொகையில் 29.44 சதவீதம் மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளது. வார்டு வாரியாக நிலுவையில் உள்ள கேட்பு எண்களை நடப்பு கேட்பு எண்ணுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டதில் பழையகட்டடத்தை இடித்துவிட்டு புதியகட்டடம் கட்டப்பட்டதற்கு தற்காலமதிப்பின் படி புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு, வசூல் செய்யப்பட்டுவருகிறது. மொத்த கேட்பில் ஏற்கனவே நீக்கம் செய்யப்பட வேண்டிய பழைய வரியினங்களான சொத்துவரி, காலிமனைவரி, குடிநீர்கட்டணம், புதைவடிகால்கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் (Non Tax) ஆகிய வசூல் செய்யத்தக்க இயலாத இனங்களும் சேர்ந்துள்ளதால், வசூல் செய்ய வேண்டிய கேட்பிற்கு கூடுதலாக நீக்கம் செய்ய வேண்டிய வரியினங்கள் சேர்ந்து மொத்த கேட்பில் உள்ளது.

அதனை சரிசெய்யும் பொருட்டு பதிவேடுகளை பரிசீலனை செய்தும், பொது மக்களிடம் இரட்டை வரியினங்களை மனுக்கள் பெற்றும், உரிய அலுவலரால் தலஆய்வு செய்யப்பட்டும், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பரிசீலனை செய்யப்பட்டும், அதன் அடிப்படையில் வார்டுவாரியாக வசூலிக்க இயலாத இனங்களுக்கானகேட்பு (Erroneous) பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளன. அதன்விவரம்பின்வருமாறு

## பட்டியல்

### திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம் –2 வசூலிக்கத்தக்க இயலாதவரி இனங்கள் விவரம்

| வார்டு .எண் | சொத்து வரி | | காலிமனை வரி | | குடிநீர் கட்டணம் | | புதை வடிகால் கட்டணம் | | தொழில்வரி | | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | |
| 17 | 116 | 19291 | 156 | 78808 | 10 | 58334 | 0 | 0 | 7 | 0 | 156433 |
| 18 | 201 | 171624 | 33 | 17012 | 64 | 654438 | 20 | 184450 | 228 | 2470 | 1029994 |
| 20 | 299 | 1129720 | 6 | 502 | 211 | 594838 | 37 | 355770 | 345 | 416283 | 2497113 |
| 30 | 194 | 1903238 | 13 | 104 | 56 | 777454 | 1 | 12000 | 61 | 0 | 2692796 |
| 31 | 124 | 57005 | 40 | 10676 | 79 | 1162580 | 29 | 340860 | 88 | 42966 | 1614087 |
| 32 | 136 | 82573 | 40 | 1810 | 53 | 711158 | 18 | 153360 | 52 | 3983 | 952884 |
| 33 | 222 | 17461965 | 15 | 300 | 109 | 1040613 | 5 | 46050 | 151 | 0 | 18548928 |
| 34 | 239 | 156170 | 106 | 145852 | 77 | 1213822 | 22 | 173610 | 67 | 0 | 1689454 |
| 47 | 720 | 3570864 | 257 | 106243 | 416 | 6518107 | 147 | 70860 | 183 | 507035 | 10773109 |
| 48 | 285 | 84827 | 53 | 7840 | 36 | 524921 | 1 | 0 | 10 | 0 | 617588 |
| 49 | 274 | 340905 | 114 | 10910 | 61 | 812536 | 0 | 0 | 79 | 1716 | 1166067 |
| 50 | 173 | 373438 | 38 | 58386 | 61 | 574932 | 2 | 17880 | 241 | 1522 | 1026158 |
| 59 | 406 | 946880 | 91 | 86604 | 198 | 507383 | 132 | 214020 | 147 | 586856 | 2341743 |
| மொத்தம் | 3389 | 26298500 | 962 | 525047 | 1431 | 15151116 | 414 | 1568860 | 1659 | 1562831 | 45106354 |

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு அலுவலகம்–2, வார்டு எண்.18ல் 82 வரியில்லா இனங்களில் கட்டடம் இடிக்கப்பட்டு வேறு கட்டடம் கட்டப்பட்டு வருவதாலும் மாநகராட்சி மருத்துவமனை கட்டப்பட்டுள்ளதாலும், கட்டடம் இடிக்கப்பட்டதாலும், செல்லாத வரியினங்கள் (Invalid Assts.) இருப்பதாலும், ஏற்கனவே குத்தகை இனங்கள் வசூல் செய்யப்பட்ட இனங்கள் கணினியில் தவறுதலாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாலும் மற்றும் சில காரணங்களால் வசூலிக்கத்தக்க இயலாத வரியில்லா இனங்கள்உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு

| வார்டு எண் | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 18 | 82 | 27922049 |
| **கூடுதல்** | | **2,79,22,049** |

மேற்கண்ட பட்டியலில் கண்ட வசூலிக்கத்தக்க இயலாத வரி இனங்களின் தொகை ரூ.**4,51,06,354** மற்றும் வரியில்லா இனங்கள் தொகை ரூ. **2,79,22,049**/– அனைத்தும் வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கேட்புத் தொகையாக ரூ.**7,30,28,403**/– (Erroneous Demand) இருப்பதால் மேற்படி கேட்புத் தொகையை கணினியில் இருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

ஏற்கனவே பழைய வரி விதிப்பு எண்களை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டு நடப்புவரை தொகை செலுத்தப்பட்டு விட்டதாலும், இரண்டு வரி விதிப்பு எண்கள் உள்ள இனங்களில் ஒரு வரிவிதிப்பு எண்களுக்கான கேட்புத் தொகைகள் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கேட்புத் தொகையாக (Erroneous Demand) இருப்பதாலும், பழைய வரி விதிப்பு எண்ணை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரி விதிப்பு எண்ணில் வரித்தொகை நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருவதால் இதில் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் கேட்புத் தொகைரூ.**4,51,06,354+** ரூ.**2,79,22,049** =ரூ.**7,30,28,403**/–ஐ மற்றும் வரிவிதிப்பு எண்ணினை கணினியில் இருந்து நீக்கம் செய்ய அனுமதி அளிக்கலாம்.

**அ1 / 001550 / 2023 (வா.கு–2)**

**தீர்மானம் எண்.212 பொருள்:68 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:69

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்–3க்குட்பட்ட 13 வார்டுகளில் நடப்பு 2022–2023–ஆம் நிதியாண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் 100 சதவீதம் வசூல் செய்திட ஏதுவாக தீவிர வரி வசூல் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி வருவாய் இனங்களில் நிலுவைத் தொகையில் 38.34 சதவீதம் மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளது. வார்டு வாரியாக நிலுவையில் உள்ள கேட்பு எண்களை நடப்பு கேட்பு எண்ணுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டதில் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டப்பட்டதற்கு தற்கால மதிப்பின் படி புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு, வசூல் செய்யப்பட்டு வருகிறது. மொத்த கேட்பில் ஏற்கனவே நீக்கம் செய்யப்பட்ட வேண்டிய பழைய வரியினங்களான சொத்துவரி, காலிமனை வரி, குடிநீர் கட்டணம், புதைவடிகால் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் (Non Tax) ஆகிய வசூல் செய்யத்தக்க இயலாத இனங்களும் சேர்ந்துள்ளதால், வசூல் செய்ய வேண்டிய கேட்பிற்கு கூடுதலாக நீக்கம் செய்ய வேண்டிய வரியினங்கள் சேர்ந்து மொத்த கேட்பில் உள்ளது.

அதனை சரி செய்யும் பொருட்டு பதிவேடுகளை பரிசீலனை செய்தும், பொதுமக்களிடம் இரட்டை வரியினங்களை மனுக்கள் பெற்றும், உரிய அலுவலரால் தல ஆய்வு செய்யப்பட்டும், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பரிசீலனை செய்யப்பட்டும், அதன் அடிப்படையில் வார்டு வாரியாக வசூலிக்க இயலாத இனங்களுக்கான கேட்பு (Erroneous) பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு

**<u>பட்டியல்</u>**

**<u>திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் –3 வசூலிக்கத்தக்க இயலாத வரி இனங்கள் விவரம்</u>**

| சொத்து வரி | | | காலிமனை வரி | | குடிநீர் கட்டணம் | | புதை வடிகால் கட்டணம் | | தொழில் வரி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வார்டு .எண் | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை | கூடுதல் |
| 16 | 174 | 289247 | 350 | 210046 | 35 | 453050 | 1 | 180 | 111 | 204615 | 1156958 |
| 35 | 234 | 180903 | 0 | 0 | 29 | 270308 | 0 | 0 | 231 | 268782 | 719993 |
| 36 | 213 | 235475 | 239 | 52274 | 5 | 14460 | 0 | 0 | 17 | 5095 | 307304 |
| 37 | 183 | 62480 | 325 | 254184 | 2 | 2400 | 0 | 0 | 50 | 302897 | 621961 |
| 38 | 125 | 59761 | 110 | 71805 | 36 | 2520 | 0 | 0 | 9 | 28357 | 162443 |
| 39 | 149 | 9926 | 212 | 283934 | 55 | 20902 | 0 | 0 | 47 | 1250 | 316012 |
| 40 | 112 | 1176 | 277 | 171529 | 55 | 645430 | 0 | 0 | 8 | 28799 | 846934 |
| 41 | 67 | 30077 | 160 | 29653 | 66 | 151197 | 0 | 0 | 0 | 0 | 210927 |
| 42 | 146 | 4246 | 479 | 291662 | 36 | 26088 | 0 | 0 | 43 | 4160 | 326156 |
| 43 | 214 | 86051 | 85 | 17656 | 30 | 5980 | 0 | 0 | 54 | 0 | 109687 |
| 44 | 186 | 16972 | 423 | 120484 | 59 | 221703 | 0 | 0 | 111 | 48735 | 407894 |
| 45 | 308 | 205725 | 269 | 93184 | 67 | 413305 | 0 | 0 | 74 | 22098 | 734312 |
| 46 | 770 | 52564 | 286 | 1192 | 184 | 971260 | 0 | 0 | 140 | 43161 | 1068177 |
| **மொத்தம்** | **2881** | **1234603** | **3215** | **1597603** | **659** | **3198603** | **1** | **180** | **895** | **957949** | **6988938** |

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–3, வார்டு எண்.40ல் கீழ்கண்ட 3 வரியில்லா இனங்களில் சாலை வசதி, மாநகராட்சி கட்டிடம், கழிவுநீர் செல்லும் பாதை போன்ற காரணங்களினால் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள கடைகள் அகற்றப்பட்டும், மற்றும் சில காரணங்களால் வசூலிக்கத்தக்க இயலாத வரியில்லா இனங்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு

| வார்டு எண் | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 40 | 3 | 341250 |
| **கூடுதல்** | | **341250** |

மேற்கண்ட பட்டியலில் கண்ட வசூலிக்கத்தக்க இயலாத வரி இனங்களின் தொகை ரூ. 69,88,938/- மற்றும் வரியில்லா இனங்களின் தொகை ரூ.341250/- அனைத்தும் வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கேட்புத் தொகையாக ரூ.73,30,188/- (Erroneous Demand) இருப்பதால் மேற்படி கேட்புத் தொகையை கணினியில் இருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

ஏற்கனவே பழைய வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டு நடப்பு வரை தொகை செலுத்தப்பட்டுவிட்டதாலும், இரண்டு வரிவிதிப்பு எண்கள் உள்ள இனங்களில் ஒரு வரிவிதிப்பு எண்களுக்கான கேட்புத் தொகைகள் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கேட்புத் தொகையாக (Erroneous Demand) இருப்பதாலும், பழைய வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரிவிதிப்பு எண்ணில் வரித்தொகை நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருவதால் இதில் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் கேட்புத் தொகை ரூ. 69,88,938 + ரூ. 3,41,250= ரூ. 73,30,188/-ஐ மற்றும் வரிவிதிப்பு எண்ணினை கணினியில் இருந்து நீக்கம் செய்ய அனுமதி அளிக்கலாம்.

**அ1 /1488/ 2023 (வா.கு-3)**

**தீர்மானம் எண்.213 பொருள்:69 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:70**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்-IV-க்குட்பட்ட 13 வார்டுகளில் நடப்பு 2022-2023-ஆம் நிதியாண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் 100 சதவீதம் வசூல் செய்திட ஏதுவாக தீவிர வரி வசூல் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி வருவாய் இனங்களில் நிலுவைத் தொகையில் 32.21 சதவீதம் மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளது. வார்டு வாரியாக நிலுவையில் உள்ள கேட்பு எண்களை நடப்பு கேட்பு எண்ணுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டதில் பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டப்பட்டதற்கு தற்கால மதிப்பின் படி புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு, வசூல் செய்யப்பட்டு வருகிறது. மொத்த கேட்பில் ஏற்கனவே நீக்கம் செய்யப்பட வேண்டிய பழைய வரியினங்களான சொத்துவரி, காலிமனை வரி, குடிநீர் கட்டணம், புதைவடிகால் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் (Non Tax) ஆகிய வசூலிக்க இயலாத இனங்களும் சேர்ந்துள்ளதால், வசூல் செய்ய வேண்டிய கேட்பிற்கு கூடுதலாக நீக்கம் செய்ய வேண்டிய வரியினங்கள் சேர்ந்து மொத்த கேட்பில் உள்ளது.

மேலும் அதனை சரி செய்யும் பொருட்டு பதிவேடுகளை பரிசீலனை செய்தும், பொதுமக்களிடம் இரட்டை வரியினங்களுக்கான மனுக்கள் பெற்றும், உரிய அலுவலரால் தல ஆய்வு செய்யப்பட்டும், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பரிசீலனை செய்யப்பட்டும், அதன் அடிப்படையில் வார்டு வாரியாக வசூலிக்க இயலாத (Erroneous) இனங்களுக்கான கேட்பு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு

## பட்டியல்

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் –IV– வசூலிக்க இயலாத வரி இனங்கள் விவரம்

| | சொத்து வரி | | காலிமனை வரி | | குடிநீர் கட்டணம் | | புதை வடிகால் கட்டணம் | | தொழில் வரி | | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வார்டு எண் | வரி விதிப்பு எண்ணிக்கை | தொகை | வரி விதிப்பு எண்ணிக்கை | தொகை | வரி விதிப்பு எண்ணிக்கை | தொகை | வரி விதிப்பு எண்ணிக்கை | தொகை | வரி விதிப்பு எண்ணிக்கை | தொகை | |
| 51 | 98 | 1134976 | 9 | 9942 | 102 | 545737 | 0 | 0 | 0 | 0 | 1690655 |
| 52 | 112 | 366185 | 3 | 1816 | 111 | 598328 | 4 | 23580 | 0 | 0 | 989909 |
| 53 | 166 | 4836400 | 7 | 77724 | 966 | 3246832 | 2 | 12600 | 10 | 151073 | 8324629 |
| 54 | 266 | 9071566 | 16 | 1449502 | 1005 | 2122380 | 0 | 0 | 1 | 90000 | 12733448 |
| 56 | 1031 | 313036 | 42 | 319705 | 14 | 126335 | 0 | 0 | 35 | 191621 | 950697 |
| 57 | 64 | 169734 | 14 | 97641 | 1 | 9335 | 0 | 0 | 138 | 672080 | 948790 |
| 58 | 688 | 664225 | 34 | 137374 | 51 | 538448 | 0 | 0 | 4 | 8532 | 1348579 |
| 60 | 191 | 356451 | 25 | 104842 | 83 | 677538 | 0 | 0 | 0 | 0 | 1138831 |
| 61 | 219 | 115833 | 126 | 409465 | 105 | 1363992 | 0 | 0 | 3 | 3133 | 1892423 |
| 62 | 805 | 214336 | 57 | 166228 | 40 | 276355 | 0 | 0 | 6 | 115007 | 771926 |
| 63 | 216 | 305412 | 58 | 129563 | 36 | 128147 | 0 | 0 | 0 | 0 | 563122 |
| 64 | 71 | 344489 | 61 | 150183 | 56 | 189630 | 0 | 0 | 0 | 0 | 684302 |
| 65 | 587 | 1133697 | 305 | 925351 | 47 | 319510 | 0 | 0 | 1 | 5095 | 2383653 |
| மொத்தம் | 4514 | 19026340 | 757 | 3979336 | 2617 | 10142567 | 6 | 36180 | 198 | 1236541 | 34420964 |

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–IV, வார்டு எண்.53 மற்றும் 56ல் கீழ்கண்ட 14 வரியில்லா இனங்களில் சாலை வசதி, மாநகராட்சி கட்டிடம், கழிவுநீர் செல்லும் பாதை போன்ற காரணங்களினால் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள கடைகள் அகற்றப்பட்டும், மற்றும் சில காரணங்களால் வசூலிக்க இயலாத வரியில்லா இனங்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு

**வரியில்லா இனங்கள்**

| வார்டு எண் | வரிவிதிப்பு எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 53 | 11 | 21070822 |
| 56 | 3 | 95202 |
| **கூடுதல்** | | **21166024** |

மேற்கண்ட பட்டியலில் கண்ட வசூலிக்கத்தக்க இயலாத வரி இனங்களின் தொகை ரூ.3,44,20,964/– மற்றும் வரியில்லா இனங்கள் தொகை ரூ.2,11,66,024/– அனைத்தும் வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கேட்புத் தொகையாக ரூ.5,55,86,988/– (Erroneous Demand) இருப்பதால் மேற்படி கேட்புத் தொகையை கணினியில் இருந்து நீக்கம் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

ஏற்கனவே பழைய வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டு நடப்பு வரை தொகை செலுத்தப்பட்டுவிட்டதாலும், இரண்டு வரிவிதிப்பு எண்கள் உள்ள இனங்களில் ஒரு வரிவிதிப்பு எண்களுக்கான கேட்புத் தொகைகள் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கேட்புத் தொகையாக (Erroneous Demand) இருப்பதாலும், பழைய வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரிவிதிப்பு எண்ணில் வரித்தொகை நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருவதால் இதில் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் கேட்புத் தொகை ரூ. 3,44,20,964/– + ரூ. 2,11,66,024/– = ரூ. 5,55,86,988/–ஐ மற்றும் வரிவிதிப்பு எண்ணினை கணினியில் இருந்து நீக்கம் செய்ய அனுமதி அளிக்கலாம்.

**அ1 / 2238 / 2023 (வா.கு–IV)**

**தீர்மானம் எண்.214 பொருள்:70 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:71**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்–5க்குட்பட்ட 13 வார்டுகளில் நடப்பு 2022–2023 – ஆம் நிதியாண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் 100 சதவீதம் வசூல் செய்திட ஏதுவாக தீவிர வரிவசூல் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படி வருவாய் இனங்களில் நிலுவைத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

வார்டுகுழு அலுவலகம்–5க்குட்பட்ட 13 வார்டுகளில் சொத்துவரி பட்டியலில் உள்ள இனங்கள் நேராய்வு செய்யப்பட்டு சொத்து வரி இனங்களுக்குரிய விலாசம் தவறுதலாகவும், குறிப்பிட்ட விலாசத்தில் குடியிருப்புகள் இல்லாமலும் மற்றும் ஒரு அல்லது இரண்டு வருடங்கள் மட்டும் நிலுவையாக உள்ளது. மேலும் மாதாந்திர பட்டியலில் புதியதாக வரிவிதிப்பு செய்யப்பட்டிருப்பதாலும், பழைய சொத்து வரி விதிப்பு எண்கள் நீக்கம் செய்யப்படாமல் தொடர்ந்து கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. (Erroneous)

மேலும், வார்டு வாரியாக நிலுவையில் உள்ள கேட்பு எண்களை நடப்பு கேட்பு எண்ணுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டதில் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டப்பட்டதற்கு தற்கால மதிப்பின்படி புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு, வசூல் செய்யப்பட்டு வருகிறது. மொத்த கேட்பில் ஏற்கனவே நீக்கம் செய்யப்பட வேண்டிய பழைய வரியினங்களான சொத்துவரி, காலிமனைவரி, குடிநீர்கட்டணம், புதைவடிகால் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் (NonTax) ஆகிய வசூல் செய்யத்தக்க இயலாத இனங்களும் சேர்ந்துள்ளதால், வசூல் செய்ய வேண்டிய கேட்பிற்கு கூடுதலாக நீக்கம் செய்ய வேண்டிய வரியினங்கள் சேர்ந்து மொத்த கேட்பில் உள்ளது.

அதனை சரி செய்யும் பொருட்டு பதிவேடுகளை பரிசீலனை செய்தும், பொதுமக்களிடம் இரட்டை வரியினங்களை மனுக்கள் பெற்றும், உரிய அலுவலரால் தள ஆய்வு செய்யப்பட்டும், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பரிசீலனை செய்யப்பட்டும், அதன் அடிப்படையில் வார்டு வாரியாக வசூலிக்க இயலாத இனங்களுக்கான கேட்பு (Erroneous) பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு

**<u>பட்டியல்</u>**

**<u>திருச்சிராப்பள்ளிமாநகராட்சிவார்டுகுழுஅலுவலகம் –5 வசூலிக்கத்தக்க இயலாத வரி இனங்கள் விவரம்</u>**

| சொத்து வரி | | | காலிமனை வரி | | குடிநீர் கட்டணம் | | புதை வடிகால் கட்டணம் | | தொழில் வரி | | வரியில்லா இனங்கள் | | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வார்டு எண் | வரி விதிப்புகளின் எண்ணிக்கை | தொகை | வரி விதிப்புகளின் எண்ணிக்கை | தொகை | வரி விதிப்புகளின் எண்ணிக்கை | தொகை | வரி விதிப்புகளின் எண்ணிக்கை | தொகை | வரி விதிப்புகளின் எண்ணிக்கை | தொகை | வரி விதிப்புகளின் எண்ணிக்கை | தொகை | தொகை |
| 8 | 163 | 245081 | 1059 | 569736 | 36 | 299865 | 38 | 367920 | 17 | 7681 | | | 1490283 |
| 9 | 278 | 531480 | 59 | 15863 | 269 | 2571752 | 44 | 339330 | 119 | 273418 | | | 3731843 |
| 10 | 265 | 451520 | 61 | 98092 | 393 | 4287817 | 114 | 1281243 | 132 | 662008 | | | 6780680 |
| 11 | 374 | 601455 | 189 | 371984 | 265 | 3063463 | 0 | 0 | 224 | 6842426 | | | 10879328 |
| 22 | 127 | 1209194 | 17 | 161640 | 127 | 2125623 | 467 | 4398950 | 689 | 1428535 | 8 | 1206119 | 10530061 |
| 23 | 262 | 231890 | 36 | 2934 | 179 | 1551725 | 21 | 173880 | 56 | 348121 | | | 2308550 |
| 24 | 259 | 460170 | 219 | 195847 | 119 | 950290 | 41 | 14300 | 0 | 0 | | | 1620607 |
| 25 | 41 | 730786 | 662 | 135493 | 30 | 194278 | 2 | 11640 | 56 | 50649 | | | 1122846 |
| 26 | 329 | 1017577 | 455 | 44520 | 96 | 1200661 | 93 | 355590 | 152 | 14439 | | | 2632787 |
| 27 | 322 | 552018 | 43 | 2166 | 268 | 2474976 | 158 | 1722950 | 87 | 587220 | | | 5339330 |
| 28 | 349 | 352570 | 13 | 21324 | 169 | 1580339 | 214 | 1566340 | 20 | 186014 | | | 3706587 |
| 29 | 155 | 36760 | 0 | 0 | 70 | 698145 | 131 | 1141980 | 51 | 235904 | | | 2112789 |
| 55 | 166 | 473580 | 203 | 759777 | 105 | 1100727 | 6 | 46800 | 207 | 849061 | | | 3229945 |
| மொத்தம் | **3090** | **6894081** | **3016** | **2379376** | **2126** | **22099661** | **1329** | **11420923** | **1810** | **11485476** | **8** | **1206119** | **55485636** |

மேலும், வார்டு எண்.22 தில்லைநகர் வணிக வளாகக்கட்டடம் கட்ட கையகப்படுத்தப்படும்போது பட்டியலில் கண்டுள்ள வரி விதிப்புதாரர்கள் உடன் கையகப்படுத்தப்பட வேண்டிய நீதிமன்ற வழக்கு அடிப்படையில் கடைகளை சீல் வைத்து அப்புறப்படுத்தப்பட்டதால் மேற்படி கடைதாரர்கள் வரியில்லா இனங்களில் (Non Tax) நிலுவையில் உள்ள தொகையினை நீக்கம் செய்யலாம்.

மேற்கண்ட பட்டியலில்கண்ட வசூலிக்கத்தக்க இயலாத வரிஇனங்களின் தொகைரூ.5,42,79,517/–மற்றும் வரியில்லா இனங்கள் தொகைரூ.12,06,119/– அனைத்தும் வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கேட்புத் தொகையாக ரூ.5,54,85,636/– (Erroneous Demand) இருப்பதால் மேற்படி கேட்புத் தொகையை கணினியில் இருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

ஏற்கனவே பழைய வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரி விதிப்பு செய்யப்பட்டு நடப்புவரை தொகை செலுத்தப்பட்டு விட்டதாலும், இரண்டு வரிவிதிப்பு எண்கள் உள்ள இனங்களில் ஒருவரி விதிப்பு எண்களுக்கான கேட்புத் தொகைகள் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கேட்புத் தொகையாக (Erroneous Demand) இருப்பதாலும், பழைய வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரி விதிப்பு எண்ணில் வரித்தொகை நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருவதால் இதில் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படவாய்ப்பில்லை என்பதால் கேட்புத் தொகை ரூ.5,42,79,517 + ரூ.12,06,119 =ரூ.5,54,85,636/–ஐ மற்றும் வரிவிதிப்பு எண்களை கணினியில் இருந்து நீக்கம் செய்ய அனுமதி அளிக்கலாம்.

**அ1 /5260 / 2023 (வா.கு–5)**

**தீர்மானம் எண்.215 பொருள்:71 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:72**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வார்டு குழு அலுவலகம்–1–ல் இரவு நேர தூய்மைப்பணி மேற்கொள்ள 50 தூய்மைப் பணியாளர்களை தனிக்குழுவாக தினக்கூலி அடிப்படையில் சுயஉதவிக்குழுக்கள் மூலம் ஈடுபடுத்திக் கொள்ள மாமன்ற அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | குழுவின் பெயர்கள் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஸ்ரீரங்கம் ஆண்கள் சுய உதவிக்குழு | 25 |
| 2 | கிருஷ்ணர் ஆண்கள் சுய உதவிக்குழு | 25 |
| **மொத்தம்** | | **50** |

மேற்கண்ட 50 தூய்மை பணியாளர்களை 21.12.2022 முதல் 28.02.2023 வரை ஆக மொத்தம் 70 நாட்களுக்கு பணி அமர்த்திக் கொள்ளவும், மேற்படி பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு தினக்கூலி ரூ.575/– என்ற அடிப்படையில் (575 X 70 நாட்கள் = 40250 X 50 பணியாளர்கள் = 20,12,500) இதற்கான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் EPF நிர்வாக பங்குத் தொகை 13% ரூ.2,61,625/– மற்றும் ESI 3.25% ரூ.65,406/– ஆக மொத்தம் ரூ.23,39,531/–க்கு நிர்வாக அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–1–ல் 50 தூய்மைப் பணியாளர்களை 21.12.2022 முதல் 28.02.2023 வரை ஆக மொத்தம் 70 நாட்களுக்கு ஊதியம் வழங்க தொகை ரூ.23,39,531/–ஐ மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

**சி3/6516/2022(வா.கு.அ–1)**

**தீர்மானம் எண்.216 பொருள்:72 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:73**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5ற்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரக்கேடு ஏற்படாத வண்ணம் தினசரி திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள சுய உதவி குழுக்களின் மூலம் பணிபுரியும் 120 தூய்மை பணியாளர்களுக்கு மாமன்றத் தீர்மானம் எண்.83 நாள் 31.01.2023ன்படி, 01.01.2023 முதல் 28.02.2023 வரை 59 நாட்களுக்கு பணியமர்த்திக் கொள்ளவும், பணிபுரிந்த நபர்களுக்கு ஊதியம் வழங்கவும், ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி 120 சுயஉதவிக் குழு தூய்மைப் பணியாளர்களை 01.03.2023 முதல் 31.03.2023 வரை மேலும் ஒரு மாதத்திற்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதியும், நாள் ஒன்றுக்கு ரூ.575/- வீதம் (120×575×31) = ரூ.21,39,000/- மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிர்வாக பங்குத்தொகை 13% சதவீதம் ரூ.2,78,070/- மற்றும் ESI பங்குத்தொகை 3.25% சதவீதம் ரூ.69,518/-ம் ஆக கூடுதல் தொகை ரூ,24,86,588/-ஐ ஊதிய செலவீனத்திற்கு வழங்க அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | சுய உதவிகுழுக்களின் பெயர் | தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை | ஊதியம் வழங்க வேண்டிய காலம் | உத்தேச செலவினத் தொகை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அம்பேத்கர் | 18 | 01.03.2023<br>31.03.2023 | 18 | x | 575 | x | 10350 | x | 31 | 320850 |
| 2 | சுபாஷ் | 16 | 01.03.2023<br>31.03.2023 | 16 | x | 575 | x | 9200 | x | 31 | 285200 |
| 3 | தில்லை | 15 | 01.03.2023<br>31.03.2023 | 15 | x | 575 | x | 8625 | x | 31 | 267375 |
| 4 | வெக்காளி | 18 | 01.03.2023<br>31.03.2023 | 18 | x | 575 | x | 10350 | x | 31 | 320850 |
| 5 | தீபம் | 13 | 01.03.2023<br>31.03.2023 | 13 | x | 575 | x | 7475 | x | 31 | 231725 |
| 6 | காவேரி | 22 | 01.03.2023<br>31.03.2023 | 22 | x | 575 | x | 12650 | x | 31 | 392150 |
| 7 | தூய்மை | 13 | 01.03.2023<br>31.03.2023 | 13 | x | 575 | x | 7475 | x | 31 | 231725 |
| 8 | மலர் | 5 | 01.03.2023<br>31.03.2023 | 5 | x | 575 | x | 2875 | x | 31 | 89125 |
| | **மொத்த ஊதியம்** | | | **120** | **x** | **575** | **x** | **69000** | **x** | 31 | **2139000** |
| | | | **EPF 13%** | | | | | | | | **278070** |
| | | | **ESI 3.25%** | | | | | | | | **69518** |
| | | | **கூடுதல் செலவினம்** | | | | | | | | **2486588** |

அலுவலக குறிப்பு : சுயஉதவிகுழுவில் உள்ள தூய்மை பணியாளர்கள் 120 நபர்களை தொடர்ந்து தினக்கூலி அடிப்படையில் பணி அமர்த்தவும், 01.03.2023 முதல் 31.03.2023 வரை 1 மாதத்திற்கு உத்தேச செலவினம் ரூ,2486588/- க்கு கணக்கு தலைப்பு எண் 2101010க்கு கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**சி**1 /00007 /2023 (வா.கு.அ **5** )

**தீர்மானம் எண்.217 பொருள்:73 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:74**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்.**5**, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினக்கூலி அடிப்படையில் **157** சுய உதவிகுழு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, திடக்கழிவு பணிகள் பாதிப்படையாத வகையில் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட **7** நுண் உரக் செயலாக்க மையத்தில் **சுய உதவி** குழுக்களில் உள்ள **157 தூய்மைப்** பணியாளர்க**ளுக்கு மாமன்ற தீர்மானம் எண்**. 84, **நாள்**. 31.01.2023**ன்படி** 01.01.2023 முதல் 28.02.2023 வரை 59 நாட்களுக்கு பணியமர்த்திக் கொள்ளவும், பணிபுரிந்த நபர்களுக்கு ஊதியம் வழங்கவும், ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி 157 சுயஉதவிக்கு பணியாளர்களை 01.02.2023 முதல் 28.02.2023 வரை 28 நாட்களுக்கு தொடர்ந்து பணியமர்த்தி கொள்வதற்கும், அப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய செலவினம் ( 157 x 575 x 90275 x 28 நாட்களுக்கு ) = ரூ.25,27,700/- மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, நிர்வாக பங்குத் தொகை மற்றும் (Management contribution) 13% ரூ.3,28,601- மற்றும் ESI பங்குத்தொகை 3.25% %.82,150/-ம் ஆக கூடுதல் தொகை ரூ.29,38,451/- ஆகும். ( 28 நாட்களில் ஞாயிறு கிழமை உள்பட மற்றும் தொழிலாளர் நலநிதி ESI பங்குத் தொகை உள்பட) (01.02.2023 முதல் 28.02.2023 வரை) ஊதியம் வழங்க நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | குழுக்களின் பெயர் விவரம் | | நுண் உர செய்லாக்க மையம் | ஊதியம் வழுங்க வேண்டிய காலம் | ஊதியம் வழுங்க வேண்டிய காலம் | | | | உத்தேச செலவினத்தொகை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 55 | ஜெய்ஹிந்த் | 10 | கருமண்டபம் | 01.02.2023 28.02.2023 | 10 | x | 575 | = | 5750 | x | 28 | 161000 |
| 2 | 29 | சூரியன் | 10 | குழுமிக்ககரை | 01.02.2023 28.02.2023 | 10 | x | 575 | = | 5750 | x | 28 | 161000 |
| 3 | 28 | சந்திரன் | 12 | | | 12 | x | 575 | = | 6900 | x | 28 | 193200 |
| 4 | 27 | பாலக்காடு | 14 | உழவர்சந்தை | 01.02.2023 28.02.2023 | 14 | x | 575 | = | 8050 | x | 28 | 225400 |
| 5 | 26 | ஸ்ரீஐயப்பன் | 11 | வயலூர் ரோடு | 01.02.2023 28.02.2023 | 11 | x | 575 | = | 6325 | x | 28 | 177100 |
| 6 | 25 | திருமலை | 12 | | | 12 | x | 575 | = | 6900 | x | 28 | 193200 |
| 7 | 24 | குழுமாயி | 14 | கல்லாங்காடு | 01.02.2023 28.02.2023 | 14 | x | 575 | = | 8050 | x | 28 | 225400 |
| 8 | 23 | தில்லை | 11 | குழுமிக்ககரை | 01.02.2023 28.02.2023 | 11 | x | 575 | = | 6325 | x | 28 | 177100 |
| 9 | 22 | திருச்சி | 16 | வாமடம் | 01.02.2023 28.02.2023 | 16 | x | 575 | = | 9200 | x | 28 | 257600 |
| 10 | 11 | ஸ்ரீ அம்மன் | 12 | கோணக்கரை | 01.02.2023 28.02.2023 | 12 | x | 575 | = | 6900 | x | 28 | 193200 |
| 11 | 10 | ஸ்ரீ விநாயகர் | 12 | | | 12 | x | 575 | = | 6900 | x | 28 | 193200 |
| 12 | 9 | தூய்மை | 13 | பனிக்கன் தெரு | 01.02.2023 28.02.2023 | 13 | x | 575 | = | 7475 | x | 28 | 209300 |
| 13 | 8 | தொடரும் | 10 | | | 10 | x | 575 | = | 5750 | x | 28 | 161000 |
| | | | மொத்தம் | | | 157 | X | 575 | = | 90275 | X | 28 | 2527700 |

**அலுவலக்குறிப்பு: திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்சமயம் நுண்உர செயலாக்க மையத்தில் பணிபுரியும் சுயஉதவிக்குழு பணியாளர்கள் 157 நபர்களை தொடர்ந்து பணியில் பயன்படுத்தி கொள்ளவும், 01.02.2023 முதல் 28.02.2023 வரை சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய தினக்கூலி உத்தேச செலவினம் 25,27,700/- மற்றும் EPF பங்குத் தொகை 13% ரூ.3,28,601/- மற்றும் ESI பங்குத் தொகை 3.25% ரூ.82,150/- ஆக கூடுதல் ரூ.29,38,451/-க்கு அனுமதி அளிக்கலாம்.**

**சி1/00006/2023 ( வா.கு.அ.5)**

**தீர்மானம் எண்.218 பொருள்:74 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:75**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்.5, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினக்கூலி அடிப்படையில் **157** சுய உதவிகுழு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, திடக்கழிவு பணிகள் பாதிப்படையாத வகையில் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட **7** நுண் உரக் செயலாக்க மையத்தில் **சுய உதவி** குழுக்களில் உள்ள **157 தூய்மைப்** பணியாளர்க**ளுக்கு மாமன்ற தீர்மானம் எண்**. 84, **நாள்**. 31.01.2023**ன்படி**, ஊதியம் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டது தற்போது மேற்படி 157 சுயஉதவிக்குழு பணியாளர்களை 01.03.2023 முதல் 31.03.2023 வரை 31 நாட்களுக்கு தொடர்ந்து பணியமர்த்தி கொள்வதற்கும், அப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய செலவினம் ( 157 x 575 x 90275 x 31 நாட்களுக்கு ) = ரூ.27,98,525/- மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, நிர்வாக பங்குத் தொகை மற்றும் (Management contribution) 13% ரூ.3,63,808/- மற்றும் ESI பங்குத்தொகை 3.25% %.90,952/-ம் ஆக கூடுதல் தொகை ரூ.32,53,285/- ஆகும். (31 நாட்களில் ஞாயிறு கிழமை உள்பட மற்றும் தொழிலாளர் நலநிதி ESI பங்குத் தொகை உள்பட) (01.03.2023 முதல் 31.03.2023 வரை) ஊதியம் வழங்க நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | குழுக்களின் பெயர் விவரம் | | நுண் உர செய்லாக்க மையம் | ஊதியம் வழங்க வேண்டிய காலம் | ஊதியம் வழங்க வேண்டிய காலம் | | | | உத்தேச செலவினத்தொகை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 55 | ஜெய்ஹிந்த் | 10 | கருமண்டபம் | 01.03.2023 31.03.2023 | 10 | x | 575 | = | 5750 | x | 31 | 178250 |
| 2 | 29 | சூரியன் | 10 | குழுமிக்ககரை | 01.03.2023 | 10 | x | 575 | = | 5750 | x | 31 | 178250 |
| 3 | 28 | சந்திரன் | 12 | | 31.03.2023 | 12 | x | 575 | = | 6900 | x | 31 | 213900 |
| 4 | 27 | பாலக்காடு | 14 | உழவர்சந்தை | 01.03.2023 31.03.2023 | 14 | x | 575 | = | 8050 | x | 31 | 249550 |
| 5 | 26 | ஸ்ரீஜயப்பன் | 11 | வயலூர் ரோடு | 01.03.2023 | 11 | x | 575 | = | 6325 | x | 31 | 196075 |
| 6 | 25 | திருமலை | 12 | | 31.03.2023 | 12 | x | 575 | = | 6900 | x | 31 | 213900 |
| 7 | 24 | குழுமாயி | 14 | கல்லாங்காடு | 01.03.2023 31.03.2023 | 14 | x | 575 | = | 8050 | x | 31 | 249550 |
| 8 | 23 | தில்லை | 11 | குழுமிக்ககரை | 01.03.2023 31.03.2023 | 11 | x | 575 | = | 6325 | x | 31 | 196075 |
| 9 | 22 | திருச்சி | 16 | வாமடம் | 01.03.2023 31.03.2023 | 16 | x | 575 | = | 9200 | x | 31 | 285200 |
| 10 | 11 | ஸ்ரீ அம்மன் | 12 | கோணக்கரை | 01.03.2023 31.03.2023 | 12 | x | 575 | = | 6900 | x | 31 | 213900 |
| 11 | 10 | ஸ்ரீ விநாயகர் | 12 | | | 12 | x | 575 | = | 6900 | x | 31 | 213900 |
| 12 | 9 | தூய்மை | 13 | பனிக்கன் | 01.03.2023 | 13 | x | 575 | = | 7475 | x | 31 | 231725 |
| 13 | 8 | தொடரும் | 10 | தெரு | 31.03.2023 | 10 | x | 575 | = | 5750 | x | 31 | 178250 |
| | | | மொத்தம் | | | 157 | X | 575 | = | 90275 | X | 31 | 2798525 |

அலுவலக்குறிப்பு: **திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்சமயம் நுண்உர செயலாக்க மையத்தில் பணிபுரியும் சுயஉதவிக்குழு பணியாளர்கள்** 157 **நபர்களை தொடர்ந்து பணியில் பயன்படுத்தி கொள்ளவும்**, 01.03.2023 **முதல்** 31.03.2023 **வரை சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய தினக்கூலி உத்தேச செலவினம்** 27,98,525/- **மற்றும்** EPF **பங்குத் தொகை** 13% **ரூ**.3,63,808/- **மற்றும்** ESI **பங்குத் தொகை** 3.25% **ரூ**.90,952/- **ஆக கூடுதல் ரூ**.32,53,285/-**க்கு அனுமதி அளிக்கலாம்**.

**சி1/00006/2023 ( வா.கு.அ.5)**

**தீர்மானம் எண்.219 பொருள்:75 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:76**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை, பொதுதனியார் கூட்டாண்மை முறையில் இயக்கி பராமரிக்கும் பணிகளை பத்தாண்டுகளுக்கு மேற்கொள்ள மெசர்ஸ்.சபரி எலக்ட்ரிக்கல்ஸ்,சென்னை நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு, அதன் படி இந்நிறுவனம் இப்பணியை மேற்கொண்டு வருகிறது.இந்நிறுவனத்தின் பராமரிப்பு காலம் 31.03.2027 வரை உள்ளது. இந்நிலையில் எல்.இ.டி மின் விளக்குகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் எண் 45490/DO1/2012, நாள் 14.09.2020 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபர படி இயக்கம் மற்றும் பராமரிப்பு தொகை வழங்கப்பட்டு வந்த நிலையில் GST 12% லிருந்து GST 18% ஆக உயர்த்தப்பட்டுள்ளதால் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ள இனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு தொகையை நிர்ணயம் செய்யப்பட்டு, மாமன்ற தீர்மானம் எண்: 23 நாள்: 31.01.2023–ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

## அட்டவணை – (1)

| வ. எண் | மின் விளக்குகளின் விபரம் | மின் விளக்கு ஒன்றிக்கு ஆண்டு பராமரிப்பு தொகை (ரூ.பை) (18% GST) உட்பட |
|---|---|---|
| 1 | அனைத்து வகையான எல்.இ.டி மின் விளக்குகளுக்கு உத்திரவாத காலத்திற்குள்ளான பராமரிப்பு தொகை | 245.00 |
| 2 | 20 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளுக்கான உத்திரவாத காலம் நிறைவடைந்த பிறகு பராமரிப்பு தொகை | 683.13 |
| 3 | 40 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளுக்கான உத்திரவாத காலம் நிறைவடைந்த பிறகு பராமரிப்பு தொகை | 1062.74 |
| 4 | 60 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளுக்கான உத்திரவாத காலம் நிறைவடைந்த பிறகு பராமரிப்பு தொகை | 1257.44 |
| 5 | 72 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளுக்கான உத்திரவாத காலம் நிறைவடைந்த பிறகு பராமரிப்பு தொகை | 1257.44 |
| 6 | 90 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளுக்கான உத்திரவாத காலம் நிறைவடைந்த பிறகு பராமரிப்பு தொகை | 1666.31 |
| 7 | 120 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளுக்கான உத்திரவாத காலம் நிறைவடைந்த பிறகு பராமரிப்பு தொகை | 1666.31 |
| 8 | 150 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளுக்கான உத்திரவாத காலம் நிறைவடைந்த பிறகு பராமரிப்பு தொகை | 1744.19 |
| 9 | 200 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளுக்கான உத்திரவாத காலம் நிறைவடைந்த பிறகு பராமரிப்பு தொகை | 1763.66 |
| 10 | ஒருமுனை தெருவிளக்கு கட்டுபாட்டு கருவி ( உத்திரவாதம் நிறைவடைந்த) | 2444.29 |
| 11 | மும்முனை தெருவிளக்கு கட்டுபாட்டு கருவி ( உத்திரவாதம் நிறைவடைந்த) | 2876.25 |
| 12 | தனிப்பட்ட தெருவிளக்கு கண்காணிப்பு கருவி (ILM) | 158.04 |

இந்நிலையில் கீழ்க்கண்ட கோப்புகளின் வாயிலாக எல்.இ.டி மின் விளக்குகள் பொருத்துவதற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு, எல்.இ.டி மின் விளக்குகள் பொருத்தும் பணி முடிவுற்று தற்போது உத்திரவாத காலத்தில் உள்ளது. அதன் விபரம் பின் வருமாறு:–

## அட்டவணை – (2)

| வ. எண் | கோப்பு எண் | எல்.இ.டி மின் விளக்குகளின் வகை மற்றும் எண்ணிக்கை ( உத்திரவாத காலம் உள்ளவை) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 20 வாட்ஸ் | 40 வாட்ஸ் | 90 வாட்ஸ் | 120 வாட்ஸ் | 150 வாட்ஸ் | மொத்தம் |
| **1** | **இ6/4016/2022/மையம்** | **26** | **0** | **11** | **2** | **3** | **42** |
| **2** | **இ6/4017/2022/மையம்** | **0** | **5** | **22** | **0** | **0** | **27** |
| **3** | **இ6/4013/2022/மையம்** | **24** | **12** | **39** | **0** | **8** | **83** |
| **4** | **இ6/4014/2022/மையம்** | **12** | **18** | **30** | **0** | **0** | **60** |
| **5** | **இ6/5065/2022/மையம்** | **0** | **20** | **41** | **0** | **0** | **61** |
| **6** | **இ6/7036/2022/மையம்** | **6** | **0** | **57** | **0** | **0** | **63** |
| **7** | **இ6/7617/2022/மையம்** | **0** | **15** | **24** | **0** | **0** | **39** |
| **8** | **இ6/7763/2022/மையம்** | **0** | **0** | **16** | **0** | **0** | **16** |
| **9** | **இ6/7892/2022/மையம்** | **0** | **0** | **7** | **0** | **0** | **7** |
| **10** | **இ6/4015/2022/மையம்** | **2** | **1** | **20** | **11** | **0** | **34** |
| **11** | **இ6/12251/2021/மையம்** | **19** | **0** | **5** | **0** | **0** | **24** |
| **12** | **இ6/3868/2022/மையம்** | **8** | **0** | **32** | **0** | **0** | **40** |
| | **மொத்தம்** | **97** | **71** | **304** | **13** | **11** | **496** |

**ஆண்டொன்றிக்கான மொத்த பராமரிப்பு செலவின தொகை :– 496 எண்கள்X ரூ.245 = ரூ.1,21,520/-**

மேற்கண்ட அட்டவணை (2)–ல் கண்டுள்ள மொத்தம் 496 எண்கள் எல்.இ.டி மின்விளக்குகளும் உத்திரவாத காலத்திற்குள் உள்ளதால் அனைத்து வகை எல்.இ.டி மின் விளக்குகளுக்கும் உத்திரவாத காலத்திற்குள்ளான பராமரிப்பு தொகை ஆண்டுடொன்றிக்கு ஒரு மின்விளக்கிற்கு ரூ.245.00 வீதம் **496** எண்களுக்கு ஆண்டொன்றிக்கு ரூ.**1,21,520/-** செலவாகும்.

மேலும் கீழ்க்கண்ட கோப்புகளின் வாயிலாக எல்.இ.டி மின் விளக்குகள் பொருத்துவதற்கு பணி உத்திரவு வழுங்கப்பட்டு, எல்.இ.டி மின் விளக்குகள் பொருத்தும் பணி முடிவுற்று உத்திரவாத காலம் முடிவடைந்துள்ள எல்.இ.டி மின் விளக்குகளின் விபரங்கள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

அட்டவணை – (3)

| வ. எண் | கோப்பு எண் | எல்.இ.டி மின் விளக்குகளின் வகை மற்றும் எண்ணிக்கை ( உத்திரவாத காலம் முடிவடைந்தவை) | | | தெருவிளக்கு கட்டுபாட்டு கருவி எண்ணிக்கை ( உத்திரவாத காலம் முடிவடைந்தவை) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 20 வாட்ஸ் | 90 வாட்ஸ் | மொத்தம் | ஒரு முனை இணைப்பு 4KVA | மும் முனை இணைப்பு 6 KVA | மொத்தம் |
| 1 | இ6/9467/2019/மையம் | 18 | 26 | 44 | 0 | 0 | 0 |
| 2 | இ6/4890/2019/மையம் | 53 | 0 | 53 | 0 | 0 | 0 |
| 3 | இ6/5513/2020/மையம் | 150 | 3 | 153 | 6 | 0 | 6 |
| 4 | இ6/4048/2020/மையம் | 61 | 15 | 76 | 2 | 0 | 2 |
| 5 | இ6/8818/2020/மையம் | 0 | 0 | 0 | 16 | 0 | 16 |
| 6 | இ6/10839/2020/மையம் | 0 | 0 | 0 | 4 | 0 | 4 |
| 7 | இ6/4049/2020/மையம் | 0 | 0 | 0 | 6 | 0 | 6 |
| 8 | இ6/10407/2020/மையம் | 0 | 0 | 0 | 2 | 0 | 2 |
| 9 | இ6/2918/2021/மையம் | 0 | 0 | 0 | 22 | 0 | 22 |
| 10 | இ6/4982/2021/மையம் | 0 | 0 | 0 | 0 | 2 | 2 |
| | **மொத்தம்** | **282** | **44** | **326** | **58** | **2** | **60** |

அட்டவணை (3)ல் தெரிவித்துள்ளபடி அனைத்தும் வகை எல்.இ.டி மின்விளக்குகள் மற்றும் தெருவிளக்கு கட்டுபாட்டு கருவிகளுக்கு உத்திரவாத காலம் முடிவடைந்த பிறகு ஆண்டொன்றிக்கு வழங்க பட வேண்டிய பராமரிப்பு தொகை விபரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்படுகிறது.

**அட்டவணை – 4**

| வ. எண் | பொருளின் விபரம் | எண்ணிக்கை | ஆண்டொன்றிக்கான பராமரிப்பு தொகை (ரூ.பை) (18% GST) உட்பட | ஆண்டொன்றிக்கான மொத்த செலவினத்கை (ரூ.பை) |
|---|---|---|---|---|
| **1** | **20 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகள்** | **282** | **683.13** | **192642.66** |
| **2** | **90 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகள்** | **44** | **1666.31** | **73317.64** |
| **3** | **ஒருமுனை தெருவிளக்கு கட்டுபாட்டு கருவி** | **58** | **2444.29** | **141768.82** |
| **4** | **மும்முனை தெருவிளக்கு கட்டுபாட்டு கருவி** | **02** | **2876.25** | **5752.5** |
| | **ஆண்டொன்றிக்கான மொத்த பராமரிப்பு செலவின தொகை :–** | | | **4,13,481.62** |

எனவே மேற்படி அட்டவணை – (2) மற்றும் அட்டவணை (4) –ல் கண்டுள்ள எல்.இ.டி மின் விளக்குகள் மற்றும் தெருவிளக்கு கட்டுபாட்டு கருவிகளை மெசர்ஸ்.சபரி எலக்ரிட்கல்ஸ், சென்னை நிறுவனம் மூலம் தொடர்ந்து இயக்கி பராமரிக்க ஓராண்டு பராமரிப்பு செலவினத்தொகை அட்டவணை–(2)ன் படி செலவினத்தொகை ரூ.1,21,520 மற்றும் அட்டவணை–(4)ன் படி செலவினத்தொகை ரூ.4,13,481.62 ஆக மொத்தம் ரூ.5,35,002/-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**mYtyfF¿¥ò:**

1. மேற்படி அட்டவணை –(2) மற்றும் அட்டவணை (4) –ல் கண்டுள்ள எல்.இ.டி மின் விளக்குகள் மற்றும் தெருவிளக்கு கட்டுபாட்டு கருவிகளை ஆண்டொன்றிற்க்கு பராமரிக்க ஆகும் செலவின தொகை ரூ.5,35,002/- க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி எல்.இ.டி மின் விளக்குகளை மெசர்ஸ்.சபரி எலக்ரிட்கல்ஸ், சென்னை நிறுவனம் மூலம் ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்த விலைவிகிதப்படி இயக்கி பராமரிக்கவும் அனுமதி அளிக்கலாம்.
3. இச்செலவினத்தை 2022-23 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டம் கணக்கு தலைப்பு எண்: 4107002–ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.500.00 இலட்சத்திலிருந்து மேற்கொள்ளலாம்

**இ6/11123/2012 மையம்**

**தீர்மானம் எண்.220 பொருள்:76 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:77**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 4, வார்டு எண்.54க்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் கீழ்கண்டவாறு கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| நவீன பொதுக்கழிப்பிடங்கள் (Pay and Use Toilet) | 03 எண்ணிக்கை |
| பெண்கள் கழிப்பிடம் ( Ladies Toilet) | 03 எண்ணிக்கை |
| நம்ம கழிப்பிடம் | 01 எண்ணிக்கை |
| பாலினம் கழிப்பிடம் ( Gender Toilet) | 01 எண்ணிக்கை |

இப்பேருந்து நிலையத்திற்கு தினசரி தஞ்சாவூர், வேளாங்கன்னி, திருவாரூர், பாண்டிச்சேரி, சென்னை,பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், கரூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆக மொத்தம் 700 பேருந்துகள் வந்து செல்லும் இடமாக உள்ளதாலும், பயனிகள் அதிக அளவில் வந்து செல்லும் பகுதியாகும்.

இப்பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடங்கள் போதிய அளவில் இல்லாததால், பொதுமக்கள் வசதிக்காக நவீன பொதுக்கழிப்பிடம் Corporation Social Responsibility (CSR Fund) நிதியின் கீழ், தனியார் பங்களிப்பு உதவியுடன், (M/s. VERITAS FOUNDATION, Chennai) நிறுவனம் அவர்களே வடிவமைத்து, தங்கள் சொந்த செலவிலே கழிப்பிடம் கட்டி, 05 ஆண்டுகள் முழுமையாக பராமரிப்பு செய்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்து 07.03.2023ம் தேதி கடிதம் கொடுத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, வார்டு எண்.45க்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் புதிதாக வடிவமைத்து (Build), கட்டுதல் (Operate) மற்றும் பராமரிப்பு செய்தல் (Maintenance) நவீன பொதுக்கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு நிபந்தனைகளுடன் ( Terms of Reference) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்** :–

| | |
|---|---|
| 1 | கழிப்பிடங்களை உபயோகிப்பவர்களிடமிருந்து கட்டணம் எதுவும் வசூல் செய்யக்கூடாது. |
| 2 | குறிப்பிட்ட கால முறைப்படி தினமும் அவ்வப்போது கழிப்பிடங்களை சுத்தம் செய்ய வேண்டும். 24 மணி நேரமும் கழிப்பிடங்கள் துர்நாற்றம் வீசாமல் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பயன்படுத்த வேண்டும். |
| 3 | தேர்ந்தெடுக்கப்படும் முகமை மேற்படி பராமரிப்பு பணிகளுக்கு தண்ணீரை மாநகராட்சியிடம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்டு, விரயமாக்கல் பராமரிக்க வேண்டும். |

| | |
|---|---|
| 4 | தேர்ந்தெடுக்கப்படும் முகமை சுவற்றில் மற்றும் மேற்கூரையில் உள்ள ஒட்டடைகள், மின்சார சாதனங்கள், தண்ணீர் வசதிகளுக்காக அமைக்கப்பட்ட தளவாடங்கள் போன்றவைகளை குறிப்பிட்ட முறைப்படி சுத்தம் செய்து பராமரிக்க வேண்டும். |
| 5 | தேர்ந்தெடுக்கப்படும் முகமை பொதுக்கழிப்பிடங்களை தரமுள்ள டிடர்ஜென்ட்கள், கிருமி நாசினி போன்றவைகளை கொண்டு 24 மணி நேரமும் சுத்தம் செய்த தூய்மையாக வைத்திருக்க வேண்டும். |
| 6 | தேர்ந்தெடுக்கப்படும் முகமை சுத்தம் செய்வதற்கு தேவையான சாதனங்களான ப்ரஷ்கள்,சோப்புகள், டிடர் ஜெண்ட்கள், டஸ்டர் துணிகள், வாளிகள், விளக்குமாறுகள், குவளைகள், கிருமி நாசினிகள், திரவ சோப்புகள், மாப்கள், போன்றவைகளை தங்களது சொந்த பொறுப்பிலும் செலவிலும் வாங்கி கொள்ள வேண்டும். இவை அனைத்தும் போதுமான அளவில் இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். |
| 7 | இப்பணித் தொடர்பாக ஏதேனும் சர்ச்சை ஏற்பட்டால், அதன் மீது முடிவெடுக்கவும், தேவைப்பட்டால் ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் ஆணையர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. மேலும், இவ்வொப்பந்தத்தினை எவ்வித முன்னறிவிப்பிமின்றி ரத்து செய்ய ஆணையர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. |
| 8 | தேர்ந்தெடுக்கப்படும் முகமை இப்பணிக்காக அமர்த்திக் கொள்ளும் அனைத்து பணியாளர்களுக்கும் முறையாக காப்பீடு செய்திருக்க வேண்டும். பணிக்காலத்தில் அவர்களுக்கு ஏதேனும் விபத்து ஏற்பட்டால், மாநகராட்சி எந்த பொறுப்பும் ஏற்காது. EPF மற்றும் ESI பங்கு தொகைகளை செலுத்த வேண்டும். |
| 9 | தேர்ந்தெடுக்கப்படும் முகமை, மாநகராட்சி பொறியாளர்களின் அறிவுரைப்படி டிஜிட்டல் விளம்பரம் செய்து கொள்ளலாம். |
| 10 | பராமரிப்பு காலம் முடிவடைந்தவுடன் மாநகராட்சி வசம் எவ்வித சேதாரமின்றி ஒப்படைக்க வேண்டும். இதில் மேற்கண்ட முகமை உரிமை ஏதும் கோரலாகாது. |
| 11 | சம்மந்தப்பட்ட மாநகராட்சி பொறியாளர் அவர்கள் அவ்வப்போது சென்று ஆய்வு செய்து உயர் அலுவலர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். |
| 12 | தேர்ந்தெடுக்கப்படும் முகமை, இக்கழிப்பிடத்தில் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால், அதற்கு முழுப் பொறுப்பேற்க வேண்டும். மாநகராட்சி எவ்வித நஷ்ட ஈடும் வழங்காது. |

**அலுவலகக்குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மெசர்ஸ். வெரிட்டாஸ் பவுண்டேஷன், சென்னை (M/s. VERITAS FOUNDATION, Chennai) நிறுவனம் 07.03.2023ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை CSR நிதியின் கீழ், தங்கள் சொந்த செலவிலேயே வடிவமைப்பு செய்து, கட்டி முடித்து, 05 ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்
3. இப்பணித் தொடர்பாக ஏதேனும் சர்ச்சை ஏற்பட்டால், அதன் மீது முடிவெடுக்கவும், தேவைப்பட்டால் ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் ஆணையர் அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கலாம். மேலும், இவ்வொப்பந்தத்தினை எவ்வித முன்னறிவிப்பிமின்றி ரத்து செய்ய ஆணையர் அவர்களுக்கு முழு அதிகாரம் அளிக்க அனுமதி அளிக்கலாம்.
4. மேற்கண்ட நிபந்தனைகளுக்கு இந்நிறுவனத்திற்கு ஒப்பந்த பத்திரம் நிறைவேற்ற ஒப்புதல்அளிக்கலாம்.

**இ7/2497/2023(மையம்)**

**தீர்மானம் எண்.221 பொருள்:77 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:78**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 5ன் பிரிவு எண்.IIIக்குட்பட்ட வார்டு எண்.27க்குட்பட்ட (பழைய வார்டு எண்.52) உள்ள நகரளவு எண்.12/5, வார்டு y பிளாக் 2, புத்தூர் E.V.R ரோடு 855.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பவள விழா கட்டிடத்தில் 1982ம் ஆண்டின் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு 1985ம் ஆண்டு முதல் மாத வாடகைக்கு திருச்சிராப்பள்ளி நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை லிட் சிந்தாமணி அவர்களுக்கு விடப்பட்டு இயங்கி வந்த நிலையில் கட்டிடத்தின் அதிகப்படியான ஆயுட்காலம் காரணமாக கட்டிடம் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. மிக பழுதடைந்த நிலையில் மாடிப்படி மற்றும் முதல்மாடி மேற்கூரை இடிந்து விழும் அபாயமுள்ளது. இதனால் உயிர்சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்நிலையில், சிந்தாமணி அலுவலக கட்டிடத்தினை உடனடியாக காலி செய்ய அறிவிப்புகள் வழங்கப்பட்டு தற்போது கட்டிடத்திலுள்ள பொருட்கள் முழுமையான நிலையில் அகற்றப்பட்டுவிட்டது.

மேலும், இக்கட்டிடத்தில் உள்ள மின் இணைப்பினை மின் வாரிய துறையினர் மூலம் துண்டிக்கப்பட்டுள்ளது. எனவே, இக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தினால் மட்டுமே திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 5ன் வார்டு குழு அலுவலக கட்டிடம் கட்ட நடப்பாண்டின் வரவு செலவு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், மேற்படி கட்டிடம் கட்ட ஏதுவாக அமையும்.

அதனைத்தொடர்ந்து, மேற்கண்ட பழுதடைந்த கட்டிடத்தினை இடிப்பதற்கு மதிப்பீடு தயார் செய்து தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி மாநகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளும் பட்சத்தில் நிதி இழப்பீடு ஏற்படும் என்பதினை கருத்தில் கொண்டும் இக்கட்டிடத்தினை இடிப்பதன் மூலம் கிடைக்கபெறும் உபயோகமற்ற பொருட்களின் மதிப்பு ரூ.4,93,300/-யை ஏற்று இக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட உள்ளூர் விலைப்புள்ளி பெற்று தகுதி வாய்ந்த நிறுவனத்திற்கு ஏலம் விடுவதற்கும் உள்ளூர் விலைப்புள்ளி பெறுவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் எழுதப்பட்டு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. அனுமதி அளிக்கலாம்.
2. இப்பணியின் அவசர, அவசியம் கருதி பழுதடைந்துள்ள கட்டிடத்தினை முற்றிலுமாக இடித்து அப்புறப்படுத்தவும் ஒப்பந்தப்புள்ளி / ஏலம் அறிவிப்பு கோரவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ1/5261/2023(வா.கு.அ5)**

**தீர்மானம் எண்.222 பொருள்:78 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:79**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.02, வார்டு எண்.49க்குட்பட்ட சங்கிலியாண்டபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் நகர்புற ஆரோக்கிய நலவாழ்வு மையம் கட்டும் பணியினை **ரூ.25.00** இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.256/21-22 வரிசை எண்.21 நாள்.11.01.2022ன் வாயிலாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், **மெசர்ஸ்.சைன் டெக்**, நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.02 %** குறைவாக விலைப்புள்ளி அளித்ததை தொடர்ந்து, மேற்கண்ட நிறுவனத்திற்கு 06.06.2022 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு, அன்று முதல் 3 மாத காலத்திற்குள் பணியினை முழுவதும் முடிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பாதியளவு பணிகள் மட்டும் முடிக்கப்பட்டு, **ரூ.14,02,485**/- தொகை வழங்கப்பட்ட நிலையில் மீதமுள்ள பணிகளை முடிக்க வேண்டி 04.11.2022, 23.11.2022 மற்றும் 14.02.2023 ஆகிய தேதிகளில் அறிவிப்புகள் வழங்கியும், தொலைபேசி மூலம் பல முறை தொடர்பு கொண்டும், இந்நாள் வரை வேலை முடிக்காமல் காலதாமதம் செய்து வருவதாலும், இப்பணி திட்டப்பணி என்பதாலும், தற்போது மேற்கண்ட பணியினை ரத்து செய்தும், ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள பொறுப்புத் தொகைகளை மாநகராட்சி நிதியில் சேர்த்து பறிமுதல் செய்யவும், ஒப்பந்தக்காரர் பெயரை கருப்புப்பட்டியலில் சேர்க்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அனுமதி அளிக்கலாம்.

**இ2/3484/2022(மையம்)**

**தீர்மானம் எண்.223 பொருள்:79 அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:80**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிக்கான விரிவான போக்குவரத்து திட்டம் (CMP) என்பது மாநகரப் பகுதியில் மக்கள் மற்றும் பொருட்களை நிலையான (Sustainable) வழியில் நகர்த்துவதற்கான (Mobility) நீண்ட கால மற்றும் தொலைநோக்கு பார்வையுடன் கொண்ட ஆய்வறிக்கையாகும். இவ்வாய்வறிக்கை, திட்டங்கள் மற்றும் முதலீட்டுத் திட்டங்களின் பட்டியலை கொண்ட ஆவணமாகும். CMP என்பது ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் போக்குவரத்துத் திட்டங்களுக்கு ஒரு முன் நிபந்தனையான ஆவணம் ஆகும். இந்த ஆவணம் ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையால், செப்டம்பர் 2014இல் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட வழிக்காட்டுதல்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு சேவை நிதி நிறுவனத்தால் (TNUIFSL) நிர்வகிக்கப்படும் திட்ட மேம்பாட்டு மானிய நிதி (PGDF)ன் கீழ் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிக்கான சி.எம்.பி (Comprehensive Mobility Plan)ஐ தயாரிக்க M/s. Urban Mass Transit Company Limited, Bangalore நிறுவனத்தை நியமித்துள்ளது. மேற்படி நிறுவனத்தாரால் 2021 ஆண்டு அக்டோபர் 28ம் தேதி ஆய்வு தொடங்கப்பட்டது. மேலும், இந்த ஆய்வு திட்ட ஆவணம் விரிவான ஆய்வுகள், பகுப்பாய்வு, பயண தேவை முன்னறிவிப்பு மற்றும் பல்வேறு பங்குதாரர்கள், அரசு சாரா தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் தொழிற்சார்ந்த அமைப்புகள் மூலம் ஆலோசனைகள் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆய்வின் வெளியீடு அடுத்த 20 ஆண்டுகளுக்கு தேவைப்படும் போக்குவரத்து உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான Master Plan ஆகும்.

இறுதி சி.எம்.பி ஆய்வறிக்கையானது திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாநகராட்சி ஆணையர் முன்னிலையில் 12 டிசம்பர் 2022ம் தேதியன்று சமர்பிக்கப்பட்டது. மேலும், இறுதி ஆய்வறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னையில் 16 மார்ச் 2023ம் தேதியன்று சமர்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழும பகுதிக்கு அடுத்த 20 ஆண்டுகளுக்கான சாலை, பொது போக்குவரத்து, மோட்டார் அல்லாத போக்குவரத்து மேம்பாடுகள், இயக்கம் மற்றும் சரக்கு போக்குவரத்து மேலாண்மைத் திட்டங்கள் போன்ற பல்வேறு போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள் இந்த ஆய்வில் பட்டியலிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட நிறுவனம் தயாரித்த ஆய்வறிக்கையை ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிடமும் ஒப்புதலுக்காக சமர்பிக்க வேண்டும். அதன் அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் நிதியுதவி பெறவும் இந்த ஆவணம் முக்கியமானதாகும். எனவே இந்த ஆய்வறிக்கை மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ2/6959 /2021(மை)**

**தீர்மானம் எண்.224 பொருள்:80 அலுவலகக்குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**மேயர்**

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**